# காஞ்சி

ஆசிரியர்

அண்ணாதுரை

18-9-66

விலை 20 காசு



# பொள்ளாச்சிப் பொலிவு!

செப்டம்பர் 10,11-ல் பொள்ளாச்சியில் நிகழ்ச்சிகளைப் படம்பிடிக்கவும், கருத்துரைகளைச் சேகரித்து இதழ்கள் மூலம் பரப்பவும் வந்திருந்த சில பத்திரிகை நிருபர்கள் மாநாட்டை முடித்துக் கொண்டு பஸ் நிலையத்தில் வந்து கூடினார்கள்.

மாநாட்டின் சிறப்புச் சொற்பொழிவுகள் பற்றி அகமும் முகமும் மலர, பேசிப் பேசி தங்களைப் பரவசத்திலாழ்த்திக் கொண்டிருந்தனர்.

முழங்காலைத் தொடும் அளவுக்கு நீண்டு பரந்த கதர் ஜிப்பா அணிந்த ஒருவர், அருகிலிருந்த பெட்டிக் கடை ஒன்றில், நின்று தாம்பூலம் போட்டுக் கொண்டிருந்தார்.

அப்போது, பஸ் நிலைய காவலுக்கு வந்த போலீஸ்காரர் ஒருவர் ஹாயாக ஒரு பீடியைச் சுண்டி இழுத்துக் கொண்டே வந்து கொண்டிருந்தார். அவரைக் கண்ட கதர்ச்சட்டை, 'என்னய்யா ஏகாம்பரம்' என்று குரல் கொடுத்தார்.

குரலைக் கேட்டுப் பதறிப் போன போலீஸ்காரர் ஏகாம்பரம், திரும்பிப் பார்த்து கடையில் காங்கிரஸ் காளியப்பன் நிற்பதைக் கண்டு பயந்தவராய், உடுக்கை சரிந்தவன் கைத் துரிதத்தில் கையிலிருந்த பீடித் துண்டை வீசியெறிந்து விட்டு, கை கூப்பி வணக்கம் செய்து மரியாதை உணர்வோடு அருகில் வந்து நின்றார்.

அக்காட்சியைக் கண்ட பத்திரிகையாளர்களும் புகைப்படக் கலைஞர்களும் தங்களுக்குள் ஏதோ பேசிக்கொள்ளத் தொடங்கினர்.

காங்கிரஸ் காளியண்ணன், "சௌக்கியமா" என்றார். "இருக்கேங்க, உங்க தயவிலே!" என்ற போலீஸ்காரர், தலையைச்சொரிந்து கொண்டே, புரொமோஷன் விஷயமா—என்று இழுக்கத் தொடங்கினார். "கவனிக்கிறேன்! கவனிக்கிறேன்..." என்று இழுத்துக் கொண்டே நடக்கத் தொடங்கினார்.

கூட்டமாக நின்று கொண்டிருந்த பத்திரிகையாளர்கள் மீது போலீஸ்காரரின் பார்வை படரத் தொடங்கியது. என்ன புரிந்துகொண்டாரோ தெரியவில்லை. அவர்களை நோக்கி வந்தார் போலீஸ்காரர்.

பத்திரிகையாளர்களில் ஒருவரான கலைமணி சொன்னார் 'மாநாட்டிலே கொடியேற்றி வைத்துப் பேசிய **பி. கே. ஜமால் முகமது** சொன்னது எவ்வளவு உண்மை பாருங்க மணிமொழி!" என்று.

அதற்குள் அவர்களை அணுகிவிட்ட போலீஸ்காரர், நீங்கல்லாம் மாநாட்டுக்கு வந்தவங்களா!—என்றார்.

அனைவரது புன்னகையும், அவ்வினாவிற்குப் பதிலாய் மாற 'சரி சரி, இப்படி இங்கே கூட்டமா நிற்காமே அந்தப் பக்கம், ஓரமாபோய் நில்லுங்க!" — என்று சொல்லி விட்டுப் போய்க்கொண்டே இருந்தார்.

அவர் போனதும் மணிமொழி, "சீன-பாகிஸ்தான் ஆக்ரமிப்பாளர்களை அடக்க முடியாத காங்கிரஸ் ஆட்சியாளர்கள் பாவம், இந்த போலீஸ்காரர்களை ஆட்டிப் படைத்து, அடக்கிவைக்கிறார்கள்; பொது மக்கள்—அவர்கள் காங்கிரஸ்காரர்களாக இருந்தாலும்கூட—சட்ட ஒழுங்கைச் செயல்படுத்தும் கடமையோடு பிணைக்கப்பட்டுவிட்ட இந்த போலீஸ்காரர்களுக்கு மதிப்புத் தரவேண்டிய நிலைமை மாறிவிட்டது; போலீஸ்காரர்கள் காங்கிரஸ்காரர்களைக் கண்டு மிரளவும், பயப்படவுமான நிலைமை வந்துவிட்டது—என்று வழக்கறிஞர் ஜமால்முகம்மது சொன்னது முழுக்க முழுக்க உண்மை!" என்றார்.

புன்னகைக் கிரல் ஒளிர, புகைப்படக் கலைஞர் பாலு "கஷ்டப்பட்டு பெற்ற சுதந்திரத்தை — மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதன் மூலமே காப்பாற்ற முடியும்; சுதந்திர நாட்டில் மக்கள் ஏழைகளாய் இருக்கக்கூடாது; அது நியாயமல்ல; வறுமையை ஒழிக்கும் பணியும், மக்களுக்கு உணவும், அன்றாடத் தேவைகளை அளிக்கும் பணியும் துரிதமாக நிறைவேற்றப்படாவிட்டால் சுதந்திரத்திற்கு அபாயம்! என்று 21—8—66ல் புதுடில்லியில் நடைபெற்ற தேசிய மாநாட்டில், காங்கிரஸ்காரர்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி, இப்போதே எதிர்க் கட்சியாகிவிட்ட காமராஜர் பேசினாரே பேச்சு, அதன்படி,— மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தாத, சுதந்திரத்திற்கு அபாயம் விளைவிக்கும் ஒரு கொடுங்கோன்மை ஆட்சியை இன்னமும் நீங்கள் அனுமதிக்கப் போகிறீர்களா?" என்று திறப்புரையில், வேலூர் நகராட்சித் தலைவர் **மா. பா. சாரதி** கேட்டதையும் இந்த சம்பவத்தையும் ஒப்பிட்டுப் பாருங்கள் மிஸ்டர் முத்து!—என்றார்.

"இந்தக் காங்கிரஸ் ஆட்சியிலே, எந்த ஒன்றையும், எந்த ஒன்றோடும் ஒப்பிட முடியும்; ஏனென்றால் கலப்பட சோஷலிசம், கலப்படப் பொருளாதாரம், கலப்பட உணவு என்றெல்லாம் சர்வம் கலப்பட மயமாக இருக்கிறதல்லவா!"—என்று பதில் சொன்ன முத்து, **உடுமலை நாராயணன்** தன் வரவேற்புரையில், "20 ஆண்டுக் கால ஆட்சிக்குப் பின்னால், நாடெங்கும் பரவலாக தற்கொலையை, பட்டினிச் சாவை, பசியை, பஞ்சத்தை, பற்றாக்குறையைப் பெருககிவிட்ட பின்னரும், நாட்டைச் சுடுகாடு ஆக்கத்தான் மீண்டும் காங்கிரஸ் ஆட்சி அமைக்கப் போகிறதா? என்று கேட்டு, கடந்த தேர்தலில் நிறுத்தப்பட்ட இரு வேட்பாளர்களில் ஒருவரைக் கூட வெற்றிக் களத்தில் சந்திக்க முடியாத கோவை மாவட்டம், அடுத்த 67 தேர்தலில், மாவட்டத்தின் அத்துணைத் தொகுதிகளிலும் நிறுத்தப்படுகின்ற எல்லா வேட்பாளர்களுக்கும் வெற்றி நிச்சயம் என்று தலைவர்களுக்கு, ஆசை வார்த்தை அல்ல — உறுதி மொழி அளிக்கிறேன் — என்று கூறிய போது, பத்து நிமிடங்களுக்கும் அதிகமாக மாநாட்டுத் திடலை அதிரும் அளவு கரவொலி எழுந்த போது நான் மெய் சிலிர்த்துப் போனேன்!" என்றார்.

"உண்மை! உண்மை!! கழகத்தின் வளர்ச்சி மாவட்டமெங்கும் அப்படித்தான் காணப்படுகிறது; செயலாற்றல் மிக்க தலைமை கோவை மாவட்டத்துக்குக் கிடைத்திருக்கிறது' என்ற மற்றொரு இதழ் நிருபர் ராமசாமி, **கே. ஏ. கிருஷ்ணசாமி** பேசும்போது "அன்று முதல் இன்றுவரை தி. மு. கழகம், மாணவர்களிடையே மங்காத செல்வாக்கோடு இருக்கிறது' எனக் கூறி, காரண காரிய விளக்கங்களோடு, ஆதாரங்களையும் அடுக்கிக் காட்டியதை நான் வரவேற்கிறேன்! என்றார்.

"கழகத் தலைவர்களும், பேச்சாளர்களும் எந்த ஒன்றை எந்தக் கோணத்திலிருந்து பேசினாலும், காங்கிரஸ்காரர்களாலேயே மறுக்க முடிவதில்லையே; சரியான விளக்கம் கொடுத்து மறுப்புத் தெரிவிக்கத்

(4-ம் பக்கம் பார்க்க)

## உரிமை இல்லை!

எந்தக் காரியத்தையும் தன் விருப்பம்போல் செய்ய எவருக்கும் உரிமை இல்லை; அந்த விருப்பம் நல்ல காரியம் செய்வதற்கா? அப்போது மட்டுமே அவ்வுரிமை உண்டு.

—சி. சிம்மன்ஸ்.


# காஞ்சி

மலர் 3 18—9—66 இதழ் 8


# திட்டமிட்ட படுகொலை?

இந்தியத் துணைக்கண்டத்தின் அரசியலுக்கு ஒரு சட்டம் தேவை எனத் தேடக்கண்ட குழுவில் இடம் பெற்ற நல்லறிஞர் சிலரின் பெருந்தன்மையால், இந்திய நாட்டுக் குடிமகன் ஒருவன் எண்ணவும்-எழுதவும்-பேசவும் முழுச் சுதந்திரம் உண்டு என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறுன்,

இது தனிமனித சுதந்திரத்தின் அடிப்படை; ஆணிவேர். இதே அடிப்படையிலும், ஆணிவேரிலும்தான் இந்தியநாட்டில் இருந்துகொண்டு இதழ்கள் நடாத்துவோரும் தங்கள் எண்ணத்தை எழுத்துருவாக்கிப் படிக்கப் படைக்கிறுர்கள்.

இவ்வாறு படிக்கக் கிடைக்கும் இதழ்களின்மீது அரசின் ஆதிக்கம் எந்த உருவிலாவது இடம் பெறுமாஞல், சுயமாக அவை இயங்கும் நிலை, மாறி அல்லகெட்டு, ஆளுவோர் சார்புக்கு அடிபணிந்துவிடும் நிலைதாஞகவே உருவாகிவிடக்கூடும் என்பதனை, சிந்திக்கத் தெரிந்த எந்த ஒருவரும் மறுக்கமாட்டார்கள்.

இன்றைய நிலையில், இந்தியத் துணைக்கண்டத்து மொத்த இதழ்களில், 65-க்கும் மேற்பட்ட விழுக்காடு ஆளுங்கட்சியை ஆதரிப்பவை. அவற்றின் பூதாகாரமான குறைபாடுகளையெல்லாம் கூட மறைத்து திரித்து, புகழ்பாடிக்கொண்டே இருப்பவை.

இதே தன்மையில் அவை இயங்கிக்கொண்டிருக்கிறபோதே மத்திய, மாநில அரசுத்துறையைச் சார்ந்த பெரியவர்களின் தலையீடு இதழ்களின்மீது அவ்வப்போது இருந்துமிருக்கிறது; பல விபரீத விளைவுகளையும் அவை பிறப்பித்துள்ளன.

பல மாநிலங்களிலுமுள்ள துணைக்கண்டத்து இதழ்களுக்கு உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்திகளைத் திரட்டித் தருவதற்கென பல செய்தி நிறுவனங்களும் ஆங்காங்கே செயல்பட்டு வருகின்றன.

இந்நிறுவனங்களால் தரப்படும் செய்திகள், ஆங்கில மொழி இதழ்களுக்கு நேரிடையாகவும் வட்டார மொழி ஏடுகளுக்கு, அந்தந்த அலுவலகங்களிலுள்ள மொழி பெயர்ப்பாளர்கள் மூலமாகவும் பயன்பட்டுக் கொண்டிருக்கின்றன.

வட்டார மொழிகளில் செய்திகள் கிடைக்கப் பெறுவதென்பது வரவேற்கத்தக்க ஏற்பாடுதான். செய்திகளைத் துரிதமாகவும் நாட்டுக்குத் தரமுடியும் இதனுல். ஆனுல்......

மத்திய அரசு ரூ. 5 இலட்சமும், குஜராத் அரசு ரூ. 3 இலட்சமும் ராஜஸ்தான் ரூ. 5 இலட்சமும் முதலீடு செய்து (இனி பிற மாநிலங்களும் இதில் சேரலாம்) "சமாசார் பாரதி" என்ற பெயரில் செய்தி நிறுவனம் ஒன்றை டெல்லியில் தொடங்க இருக்கும் செய்தி அண்மையில் வெளியாகி இருக்கிறது.

அரசாங்க மூலதனத்துடன் இயங்கப் போகும் இந்நிறுவனம் இந்தியிலும் பிற வட்டார மொழிகளிலும் இனி இதழ்களுக்குச் செய்தி தரும்!

எண்ணவும், எழுதவும் அடிப்படை உரிமையோடு செய்திகளைத் தரும் தனித்துறை செய்தி நிறுவனங்களே பலதடவை கட்டுப்பாடுகளுக்கு ஆளாகவேண்டி நேரிடும்போது, பலசெய்திகள் திரிக்கப்பட்டும் மறைக்கப்பட்டும் விடுகிற நிலைமை உருவாவதற்கு வாய்ப்புகள் மலிந்து கிடக்கிற நிலையில்-

அரசின் கட்டுப்பாட்டிலும், மூலதனத்திலும் நிறுவப்பட்டு இயங்கவிருக்கின்ற "சமாசார் பாரதி'. செய்தி நிறுவனம், எத்தகைய செய்திகளை இதழ்களுக்குத் தரும்? வடிகட்டி வழங்கப்படும் செய்திகளின் சாரம் இதழ்களின் சுருக்கத்தில் இன்னும் சுருங்கி, செய்தி விளக்கம் கிடைக்கப் பெறுமா? உண்மைகளைப் புரிந்து கொள்ளுகிறேம் என்பதற்கு உத்திரவாதம் உண்டா?

இத்தகைய விஞக்களுக்குச் சரியான பதில் கிடைக்கப்பெற இயலாது; அரசினரும் பதில் தரமாட்டார்கள்.

தாங்களே ஜனநாயகச் சிந்தாந்தத்திற்குக்கூட பிதாக்கள் என்று கூப்பாடு போடுபவர்கள், மனமார அறிவுத்தெளிவோடு ஜனநாயகப் படுகொலை புரியும் திட்டம்தான் 'சமார்ச்சார் பாரதி'த் திட்டம்!

இதழ்கள் நடாத்துவோரின் எண்ணச் சுதந்திரமும், எழுத்துச் சுதந்திரமும் பறிக்கப்பட்டுவிடப் போகிறது.

இந்த அரசாங்கம், இப்படி ஒரு படுபாதகத்தனத்திற்குத் தன்னை எந்த நேரமும் ஆட்படுத்திக்கொள்ளும் என்பதை தீர்க்க தரிசனமாக உணர்ந்ததஞல் தானே என்னவோ-

> "அரசாங்கம், செய்தித் தாள்களிலோ, செய்தி நிறுவனங்களிலோ எவ்விதப் பணப் பற்றும்-அதாவது, முதலீடும் செய்வது கூடாது"

-என்று 'பிரஸ் கமிஷன்' முன்கூட்டியே பரிந்துரைத்துள்ளது.

அரசினரின் ஆயிரக்கணக்கான 'கமிஷன்'களின் பரிந்துரைகளையெல்லாம், வீசி யெறிந்துவிட்டு, சர்வாதிகார நடைபயிலத் தொடங்கி இருக்கும் காங்கிரஸ் ஆட்சியினர்-

முன்னதாகவே கூறப்பட்டுள்ள கருத்துக்கு மதிப்பளிப்பர் என நம்ப முடியாது!

இம்மாதிரியான திட்டமிட்ட படுகொலைகளுக்கு முடிவு கட்ட வேண்டியவர்கள் பொதுமக்களும், அவர்களுக்காக இதழ்கள் நடாத்துவோருமேயாவார்கள்.

✽

---

காஞ்சி

மலர் 3 11—9—66 இதழ் 7

கடந்த கிழமை இதழ் ஆண்டு மலராக வெளிவந்திருப்பதால், தனி இதழ் கிடையாது என்பதை எல்லா விற்பனையாளர்களுக்கும், நூலகங்களுக்கும், சந்தாதாரர்களுக்கும் அறிவித்துக்கொள்கிறேம்.

—உரிமையாளர்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

திராணியற்றவர்கள், வசை மொழி பேசித்தானே பதில் தருவதாக நினைத்துக் கொள்கிறார்கள்! என்றார் பாலு.

பாலுவை இடைமறித்து முத்து, 'கோவை மாவட்டத்தைச் சேர்ந்த சி. சுப்பிரமணியம் மத்திய அரசு அமைச்சராக இருந்தும், மாவட்டமெங்கணும் பஞ்சத்தைப் பற்றியும், பற்றுக்குறை பற்றியுமே மக்கள் முறையிடுகிறார்கள்; பாவம், அமைச்சரே முறையிடப்பட வேண்டிய நிலைமைக்கு ஆளாகிவிட்டபோது. வேறு எதனை அவரிடமும், அவரைச் சார்ந்த அரசிடமும் எதிர்பார்க்க முடியும் என்றும், காங்கிரஸ்காரர்களே நம்மைத் தேர்தலில் நிற்கச் சொல்லி சவால் விட்டு விட்டு நாமும் ஈடுபடுத்திக் கொண்ட பின்பு, நம் வெற்றி வாய்ப்பைக் கண்டு கலங்கிப்போன நிலையில், இப்போதும் கூப்பாடு போடுவது பொருந்காத தன்மை' என்று ஏ. கோவிந்தசாமி கூறியதைப் பாராட்டுகிறேன்! என்றார்.

மணிமொழி குறுக்கிட்டு "காங்கிரசின் சர்வாதிகார வெறித்தனத்தைச் சரித்துச் சாய்க்கவும், தட்டிக் கேட்கவும் நாதியற்றுக் கிடந்த தமிழகத்தில், கழகத்தைத் தோற்றுவித்து ஒரு சரியான எதிர்க்கட்சியாக்கிய அண்ணா அவர்களுக்குத் தமிழகம் எப்படி எப்படி நன்றி காட்டினாலும், ஈடாகாது என்றும், நாட்டுரிமை, மக்கள் நலம்பற்றித் தட்டிக் கேட்கும்போதெல்லாம், துப்பாக்கி கொண்டு பதில் சொல்லத் தன்னைத் தயார் படுத்திக்கொண்டுவிட்ட இந்த அரசு, நாட்டை ஆள சரியான எதிர்க்கட்சி இல்லை என ஒப்பாரி வைப்பது எத்தனைப் பொய்க் கூற்று, போலிவாதம் என எடுத்துக்காட்டி, காமராசரது அதிசய-அபூர்வமான பேச்சுகளுக்குப் பதில் சொல்லும் வகையில் 1967 தேர்தலிலே நாம் முழு அளவு வெற்றி காணும் வழி முறைகளில் ஈடுபட்டு, உழைத்தாக வேண்டும் — என்று மாநாட்டுத் தலைவர், இரெ. இளம்வழுதி, தலைமையுரையில் பேசியது, புள்ளிவிவரம் பேசி பித்தலாட்டங்கள் செய்யும் இந்த அரசுக்குச் சரியான சாட்டையடி என்றார்.

"இதை நீங்கள் சொல்லிக்கொள்கிறீர்களே! நாங்கள் அல்லவா சொல்லவேண்டும்!"-என்றார் காங்கிரஸ் இதழ் நிருபர் கஞ்சமலை!

"மிஸ்டர் கஞ்சமலை! பரிதாபப் படுகிறேன் உங்கள் நிலைமைக்கு! மாநாட்டு நிகழ்ச்சிகளின் முழு விவரத்தையும், பேச்சுக்களின் முக்கிய சாரத்தையும், எப்போதாவது ஒரு முறை உங்கள் ஏடு பிரசுரித்ததுண்டா? மாநாட்டில் சலசலப்பு-என்று எழுதுவீர்கள்; தலைவர்களது கருணைமிக்க முகங்களைப் பார்க்க, ஆர்வ மிகுதியால் மக்கள் முண்டியடித்துக்கொண்டு முன்னே வந்திருப்பார்கள்: எழுந்து சென்றவர் இடத்தில் இன்னொருவர் வந்து அமர்ந்திருப்பார்; சென்றவர் மீண்டும் வந்து அந்த இடத்தைச் சற்று உரத்தக் குரலில் கேட்டிருப்பார்! மற்றவர் மறுத்திருப்பார்! உரையாடல் சற்று உரத்தக்குரலில் ஒலித்திருக்கும்! உங்கள் ஏட்டில் கூட்டத்தில் குழப்பம்-என்று செய்தி வரும்! இதற்காகத்தானே நீங்கள் வருகிறீர்கள்! உங்கள் இதயம் உணரும் உண்மைகளை-ஒருமுறையாவது இதழில் எழுதி — நாட்டு மக்களுக்கு உண்மையை உணர்த்தியிருக்கிறீர்களா?" — என்று அக வெறுப்பால் அல்ல, அனுதாபத்தோடு கேட்டார் ராமசாமி!

பதில் சொல்ல முடியாத கஞ்சமலை, மன்னியுங்கள்! காங்கிரஸ் ஆளும் கட்டில் ஏறிய நாள் முதல், இந்தியத் துணைக்கண்டத்து அத்துணை மாநிலங்களிலும் பதவிப் பொறுப்பிலிருந்த பல அமைச்சர்களும் ஊழல் குற்றச்சாட்டுக்கு இலக்காகி இருக்கிறார்கள் எனக் கூறி, கேரள சங்கர், ஆந்திர பிரம்மானந்த ரெட்டி, சுகாதியோ காஷ்மீர் பக்ஷிகுலாம், ஓரிசா பட்நாய்க், பஞ்சாப் கெய்ரோன் முதலானவர்களது நிலையையும் இறுதியாக காமராசர், ரூ. 1 கோடியே 20 லட்சம் பணம் பாங்கியில் சேமித்திருக்கிறார்; இதுபற்றி டில்லித் தெருக்களில் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளுக்கு இன்னமும் அவர் பதில் சொல்லவில்லை; மாறாக எவன் யோக்யன் எனக் கேட்டு, அனைவர்க்கும் நற்சான்று வழங்குகிறார். ஆகவே காமராசரும் ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளானவரே!' — என்று மதுரை முத்து — பேசிய பேச்சை முழுவதுமாக குறிப்பெடுத்திருக்கிறேன்! நிச்சயம் இதழில் பிரசுரிக்க ஏற்பாடு செய்வேன்!" என்றார்.

பரிதாபமிக்க ஒரு பார்வையை அவர்மீது பாய்ச்சிவிட்டு, மிஸ்டர் கஞ்சமலை! நீங்கள் எழுதிக் கொடுத்தாலும் பிரசுரிக்கமாட்டார்கள் ஆசிரியர்கள்; அவர்கள் உங்கள் பக்கம் இல்லை; ஆட்சியினர் பக்கம். ஒரு செய்தியை வைத்து, மற்றொரு செய்தி உண்டாக்கத்தான் உங்களை அனுப்பி இருக்கிறார்கள்! ஐயோ பாவம்! என்றார் கலைமணி.

கஞ்சமலையால் பதில் சொல்ல முடியவில்லை. அவரை விடுங்கள் கலைமணி! ராகவானந்தம் பேசுகிறபோது நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக சோசலிசச் சித்தாந்தத்தைச் செயல்படுத்த வேண்டும் என்பதில் இரு வேறு கருத்துக்களுக்கு இடமில்லை எனக் கூறி, கழகம் சோஷலிசத் திட்டத்தை எதிர்க்கிறது என்று பச்சைப் பொய்ப் பேசத் தொடங்கிவிட்ட காங்கிரஸ் பேச்சாளர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் அளித்தபதில் பாராட்டத் தக்கதில்லையா! — என்றார் மணிமொழி!

"ஆமாமாம்! அடுத்துத் தில்லை வில்லாளன் பேசும்போது, காங்கிரஸ் ஆட்சியினர் இயற்றும் சட்டங்கள் கடந்த காலத்தில் எப்படி எப்படி தடம் புரட்டப்பட்டிருக்கின்றனவென்றும், எத்தனை முறை திருத்தப்பட்டு மடமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளது எனவும் எடுத்துக் காட்டி அளித்த விளக்கத்தை நான் கட்டம் (Box) கட்டி வெளியிடப் போகிறேன்!" என்றார் முத்து.

சி. பி. சிற்றரசு பேசும்போது, ஆளுக்கொரு வீடு கொடுப்போம் என்று காங்கிரசுக்காரர்கள் பேசுகிறார்களே! கணவன் ஒரு ஊரிலும். மனைவி ஒரு ஊரிலும் இருந்தால், அவர்களுக்கு ஆளுக்கொரு வீடு கொடுக்கப்பட்டால், குடும்பம் நடக்குமா? புத்திசாலித்தனமான பேச்சா இது? குடும்பத்துக்கொரு வீடு என்று பேசியிருந்தால் அறிவுடைய பேச்சாக இருக்கும் எனக் கூறிவிட்டு 1952ல் ஆட்சி அமைக்கதான் வரவேண்டுமெனறால், காமராசர் கொண்டிருந்த காங்கிரசுத் தலைமைப் பதவியைத் துறக்கவேண்டும் என்று ராஜாஜி கூறியபோது மானங் கெட்ட நிலையில், பதவி துறந்த காமராஜர், நாட்டின் மானத்தைக் காக்கத் தக்கவரா?— என்று குறிப்பிட்டது, தக்க சமயத்தில் எடுத்துக் காட்டப்பட்ட அரிய விளக்கம்! என்றார் ராமசாமி.

கலைமணி குறுக்கிட்டு, "லட்சக் கணக்கிலும் கோடிக் கணக்கிலும் தேர்தல் நிதியென காங்கிரசார் திரட்டிக் கொண்டிருப்பது மிச்ச சொச்சம் இருக்கும் ஜனநாயகப் பண்பையும் அடியோடு ஒழித்துக்கட்டத்தான் என்று பேராசிரியர் அன்பழகன் தந்த விளக்கமும் அருமை

(15-ம் பக்கம் பார்க்க)

# தம்பி

## ★ தீமிதித் திருவிழா ★

அறிவூர் அறிவானந்தர் சொன்ன கதை இது.

இதுலே, மெய்யம்மை கருத்தப்பன், பவுனும்பாள் வலைவிரித்தான், கோட்டையூரான் சோலெடுத்தான், வாக்களிப்பார் தெளிவப்பன், கோட்டூரான், இருட்டூரான் எனபோர் உளர்.

உடகுரியன் கோட்டையூர் நுழைவதைத் தடுத்திட சூழ்ச்சி நடத்தப்படுவதும், அது முறியடிக்கப்படுவதும் கதையில விளக்கப்பட்டிருக்கிறது.

மெய்யம்மையிடம் பவுனும்பாள் தூபம்போட — வருகிற கட்டத்துடன் கதை துவங்குகிறது.

### மெய்யம்மை இல்லம்

போகத்தான் போறேன்; போகத்தான் போறேன்னு சொல்லிக்கொண்டே இருந்த பொழுதுகளும்; தலையே போறதானாலும் போகாம இருக்கப்போறதில்லே தீமிதிக்கற திருவிழாவுக்குன்னு; போகல்லியா, அமர்க்களமா நடக்குதாமே ஆட்சியூர் தடியெடுத்தான் கோயிலிலே; தீமதிக்கிற திருவிழா.

போகணும்னு கொள்ளை ஆசைதான். தீமிதிக்கிற திருவிழாவோட வேடிக்கை பார்க்கமட்டுமில்ல, தீ மிதிக்கறதுக்கே ஆசைதான......

தீ மிதிக்கிறதுக்கா? அடீ ஆத்தே! கால் புண்ணாயிடுமே கண்டவங்க தீமிதிச்சா...

மிதிக்கிறவங்க காலெல்லாம் என்ன தீஞ்சாப் போகுது......

அவங்க வேண்டுதலைச் செய்துகொணடவங்க — விரதம் இருக்கிறவங்க — அவங்களைத் தீ ஒண்ணும் செய்துடாதாம்.

எனக்கு மட்டும் என்னவாம். நானுந்தான், தீ மிதிக்கறதுன்னு தீர்மானிச்சி வைச்சிருக்கறேன்.

பயம் இல்லையா, உனக்கு......நெஜமாச் சொல்லு, தீயிலே இறங்கத் துணிவு இருக்குதா?


இருக்கறதாலேதான், சொல்றேன் தீ மிதிச்சே காட்டப்போறேன்னு......

தீர்மானம் செய்துகொண்டிருந்தாச் செய்யத்தான் வேணும்; செய்வதாச் சொல்லிவிட்டுச் செய்யாமப் போனாத்தான, ஏகப்பட்ட பாபமாம், எல்லம்மன் கோயில் பூசாரி ஏழெட்டு நாளைக்கு முன்னாலே சொனனாரு......

காலையிலே சொன்னாரா, மாலையிலே சொன்னாரா, அந்தப் பேச்சு?

அதென்ன என்னமோ ஒரு தினுசாக் கேட்கறே, காலை வேளையிலா, மாலையிலான்னு......

காரணத்தோடுதான் கேட்கறேன். அவரோட பேச்சு பொழுதுவிடிஞ்சாப் போச்சி புரியல்லையா! அட அவன் மொடாக குடியன் — போதையிலே பேசினானா, நிதானத்தோட இருந்து பேசினானான்னுதான் கேட்கறேன்.



# தூண்டிவிட்டது துயர் துடைக்கவா?

நீ ஒரு குறும்பு! பூஜாரி, நல்ல கட்டுகட்டா விபூதி பூசிக்கிட்டு, குங்குமம் அப்பிக்கிட்டு, சுத்தமா இருக்கறப்போதான் பேசினாரு. நீ சொல்ற மாதிரியிலே இல்லே. அது கிடக்குது; பொறப்படுறதுன்னு பொழுதோடக் கிளம்பு.

அதைப்பத்தித்தான் யோசிக்கறேன்......

அஞ்சாறு கல் தொலைவு நடக்கவேணுமே, கால் வலிக்குமேன்னு கவலை இருக்கும்......

அந்தக் கவலை கிடையாது — நான் என்ன, மேனாமினுக்கிவாழ்வுநடத்திக்கிட்டா இருக்கறேன், நடந்தா கால் கடுக்க. காடுமேடு சுத்தி உரம் ஏறினதுதான் காலு......ஆனல்......

போறதுக்குள்ளே இருட்டாயிடுமே, அதை எண்ணிப் பயப்படறயா......

அட, அந்தப் பயம் எல்லாம் இல்லே போ! நான் என்ன, கழுத்திலே தொங்கத் தொங்கப் போட்டுக்கிட்டா இருக்கறேன், தங்கச் செயினு. உள்ளது, மூக்குத்தி–அதுவும் பாட்டி போட்டுக்கிட்டு இருந்தது —பழசு—முழுசா பத்து ரூபா கூடப் போவாது.

வேறே என்ன காரணம், தயக்கத்துக்கு...

அதென்னடி அப்படிக் கேட்டுவிட்டே ... நான் என்ன ஒண்டிக்கட்டையா, நினைச்ச உடனே பொறப்பட. வீடுன்னு ஒண்ணு இல்லையா, அதிலே தட்டு முட்டுச் சாமானு ஏதோ கொஞ்சம் இல்லையா? கொழந்தை இருக்குது, தத்தித் தத்தி நடக்கற வயசு. அதை என்ன செய்யறது...

கொழந்தைக்கு என்ன...வீட்டிலே இருக்குது, வயத்துக்குப் போதுமானது போட்டுவிட்டா ... பங்காளி வீட்டிலே, பார்த்துக்கொள்ள மாட்டாங்களா...

நல்லாச் சொன்னயே ஒரு பேச்சு; நண்டு சுட்டு நரியைக் காவல் வைக்கற மாதிரி, என் கொழந்தைக்குக் காவலு, என்னோட பங்காளிகளா? அதுபோதுமே தலைக்குத் தீம்பு.

உன்னோட கொழந்தையை, நீ, தீ மிதிக்கிற திருவிழாவுக்குப் போய்த் திரும்பற வரைக்கும், பார்த்துக் கொள்ளவா மாட்டாங்க உன்னோட பங்காளிங்க...

விவரம் தெரியாமப் பேசறே. அந்தப் பங்காளிங்க —என கொழந்தை பொறந்ததுலே இருந்து, சபிச்சுக் கொட்டிக்கிட்டு இருப்பவங்களாச்சே–உனக்குத் தெரியாதா? விளக்கேத்திக் கும்பிட்டாங்க, கொழந்தை மாந்தத்திலே போயிடாதா, மாரிக்குப் பலியாயிடாதான்னு எல்லாம்...

செச்சே! கொழந்தைன்னு கொடியவங்களெல்லாம் கூட கொண்டாடுவாங்கன்னு பெரியவங்க சொல்லுவாங்களே...

இது, எல்லாக் கொழந்தையும்போல இல்லா, அதைத் தெரிஞ்சுக்கோ முதலிலே. இது அரசாளப் பிறந்தது, ஆமாம். பூவாகி காயாகி கனியாகவேணும். அதைப் பாதுகாத்து, வளரச் செய்தா, நாங்க இழந்துவிட்ட செல்வத்தை மீட்டுக் கொண்டுவந்து எங்களோட, குலம் விளங்கவழிசெய்துவைக்கும் அப்பேற்பட்ட கொழந்தை இது.

இருக்கட்டும். அதனாலே என்ன? பங்காளிங்க என்ன அதைக் கடிச்சுத் தின்னுப் போடுவாங்களா, கையைக் காலை ஒடிச்சிப் போடுவாங்களா...

கால் அரைக்கு வித்துப் போடுவாங்க, வெளியூரானுக்கு. காணமப் போயிட்டுது, தேடாத இடமல்லே, சுத்தாத தெருவு இல்லே; கொழந்தையைக் காணோம்னு நீலிக் கண்ணீர் வடிச்சி, கதையை முடிச்சுடுவாங்க.

பைத்யம் உனக்கு; கொழந்தையைக் கொடுமை செய்ய யாருக்கும் மனசு வராது...

அப்படியாச் சொல்றே......நெஜமா, நம்பிக்கையோடவா சொல்றே...

சத்யப் பிரமாணமாச் சொல்றேன், கொழந்தைக்கு ஒரு கெடுதியும் வராது. நான் பார்த்துக் கொள்றேன்; நீ பயமில்லாமல் போய் வா.

உன்னோட தைரியத்திலேதான், போக முடிவு செய்யறேன். கொழந்தைக்கு ஒரு கெடுதலும் வராதபடி பார்த்துக்கொள்ளு. தீ மிதிக்கிற திருவிழா முடிஞ்சி, நான் வீடு திரும்ப, விடிய மணி நாலு ஆகுமோ அஞ்சு ஆகுமோ, தெரியாது...

அப்ப, உன்னோட வீட்டுக்காரரும் அண்ணவும் வந்ததும் கிளம்பப் போறயா...

ஆமாம்; அவரும் வருவாரேல்லோ...

ஆமாம், குடும்பத்தோடப் போனாத்தானே, பூஜை பலன் கொடுக்கும்...

நீ மட்டும் என்ன, நாங்களும்தான் வரப் போறோம்னு அவங்களும்சொல்லிக்கிட்டுத்தான் இருக்கறாங்க. நான் மட்டும் பொறப்பட்டா, போய்விட்டு வான்னு சொல்வாங்க—

எல்லோருந்தான் கிளம்புவாங்க ...... நான், நீ பொறப்படறப்போ, வந்து பார்க்கறேன்; வழிஅனுப்பி வைக்கறேன். உனக்குத்தான் தெரியுமே, நான், தீ மிதிக்கிற திருவிழாவுக்குப் போற பழக்கத்தை நிறுத்திப் போட்டது."

பவுனம்பாள் மெய்யம்மையுடன் பேசிவிட்டுச் சென்றுன பிறகு, மெய்யம்மையின் கணவன் கருத்தப்பன் வீடு வர, நடந்த உரையாடலை மனைவி கூறுகிறாள்.

கருத்தப்பன் எதனையும் ஆராய்ந்து பார்த்திடும் இயல்பினன்.

தீ மிதிக்கும் திருவிழாவுக்குப் போகவேண்டும் என்று ஏன் பவுனம்பாள் தூண்டிவிட முனைந்தாள் என்பது குறித்துச்சிந்திக்கலானான். மெய்யம்மையுடன் அதுபற்றிப் பேசிடலானான்.

பவுனம்பாளா சொன்னாங்கறே, தீ மிதிக்கிற திருவிழாவுக்குப் போய்வரச்சொல்லி......

ஆமா, அவதான், சொன்னா, தீமிதிக்கிற திருவிழா வரட்டும், போகத்தான்போறேன், போகத்தான

# பழக்கம் கிடையாதா? பக்குவம் தெரியாதா?

போறேன்னு பேசிக்கிட்டே இருக்கறியே. ஆட்சியூர் தடியெடுததான் கோயில் திருவிழாவுக்குப் போகல வியான்னு.......

அட, இது அதிசயமா இருக்குது, புள்ளே! பவுனும்பா வாயாலே, தீமிதிக்கற திருவிழா பத்திப் பெருமையாச் சொல்றது;......பவுனும்பாவும் வருதா உன் கூட......

இல்லே, இல்லே, அதெப்படி வருவா. அவதான், தீமிதிக்கற வழக்கத்தை விட்டுவிட்டதாச் சொல்லியாச்சே......

அதைத்தான் சொல்றேன்; தீமிதிக்கிறது பைத்யக்காரதனம், அதாலே ஒரு பலனும் இல்லேன்னு ஊர் முச்சூடும் பேசிக்கிட்டுஇக்கிறபவுனும்பா, உன்னை ஏன் தூண்ட வேணும், தீமிதிக்கிற திருவிழாவுக்குப் போகச் சொல்லி......

அவபேர்லே குத்தம் கண்டுபிடிக்கறதா, நம்ம வேலை. நாம சொல்லிக்கொண்டு இருந்தமேல்லோ, தீமிதிக்கிற திருவிழா வந்தா, போகப்போறோம்னு...

நாம சொன்னது நெஜந்தான் மெய்யம்மே! அதை நான் மறுக்கலலே. நம்மை, தீமிதிக்கிற திருவிழாவுக்குப் போகச் சொல்றதிலே என்ன அக்கறை, ஏன் அந்த அக்கறை, தீமிதிக்கிறதை வெறுக்கிற பவுனும்பாவுக்கு? அதுதானே புதிரா இருக்குது. நாம, வீட்டைவிட்டு, வெளியே போகணும் என்கிறதிலே அல்லவா பவுனும்பாவுக்கு அக்கறை ஏற்பட்டிருக்குதுன்னு தோணுது.

உங்களுக்குத் தோணும், எதற்கும் ஒன்பதனுயிரம் சந்தேகம்.

❋

மகிழ்ச்சியுடன் வீடு திரும்பிய பவுனும்பாளை அவள் கணவன், வலைவிரிப்பான் கண்டு மகிழ்கிறுன்.

மெய்யம்மையிடம் பக்குவமாகப் பேசிக் காரியத்தைக் சுச்சிதமாக முடிக்கிறுளோ இல்லையோ என்ற கவலையுடன் இருந்துவந்த வலைவிரிப்பான் பவுனும்பாள் வெற்றிக்களை முகத்தில் ஆட வந்ததுகண்டு நடத்ததைக் கூறிடக்கேட்டு, பேசுகிருன்.

சந்தேகப்படவே இல்லையா, மெய்யம்மா, உன் பேச்சைக்கேட்டு

சந்தேகப்படுகிறதுபோலவா நான் பேசுவேன். எனக்கு என்ன, பக்குவம் தெரியாதா, பழக்கம் கிடையாதா.

பவுனும்பா! நீயோ இதுவரைக்கும், தீமிதிக்கிற திருவிழாவுக்குப் போறது தப்புன்னு பேசி வந்திருக்கே......

ஆமாம். இப்பக்கூடத்தான், என்னுடை எண்ணம் அது. நான் போகப்போறது இல்லே, தீமிதிக்க...

தீமிதிக்கப் போகாதவ, எங்களை மட்டும் போகச் சொல்றயே, ஏன்னு, மெய்யம்மை கேட்கலியா?

கேட்கவிடுவேனு? தீமிதிக்கிற திருவிழாவுக்குப் போகப் பயமான்னு? கேட்டு ரோஷத்தை மூட்டிவிட்டேன். பாரேன், பிறகு மெய்யம்மை பட்ட பாட்டை! போகத்தான் போறேன், ஆனு கொழந்தை ஒண்ணு இருக்கேன்னு இழுத்தா...

மெய்யம்மைக்கு எப்பவும் அந்தக் கொழந்தை கவனம் இருக்குமே; தெரியுமே—

ரொம்பக் கவலைப்பட்டா கொழந்தைக்கு, பங்காளிங்களாலே, எதாச்சம் கெடுதல் வந்துவிட்டா என்ன செய்யறதுன்னு பொலம்பினு.

பொலம்பி? போகப் போறதில்லே தீமிதிக்கன்னு சொல்லிவிட்டாளா—...

சொல்லவிடுவேனு? கொழந்தையைப்பத்திப் பயப்படவேணும்; பார்த்துக்கொள்ள நான் இல்லையான்னு சொன்னேன் ஒப்புக் கொண்டா போக...

சாமர்த்தியக்காரி பவுனும்பா, நீ மெய்யம்மை குடும்பத்தோடத்தானே கிளம்புவா...

ஆமாம்; இவமட்டும் போனு, மத்ததுக சும்மா இருக்குமா... கொழந்தை மட்டும்தான் வீட்டிலே ...கொண்டாட்டந்தான் உங்கபாடு...

நம்மபாடுன்னு சொல்லு—பிரித்து வைத்துப் பேசாதே...


## சட்டைப்பையில் வைத்துக்கொள்க!

உலாவச் செல்கிறீர்கள்
அங்காடிக்குப் போகிறீர்கள்
உரையாடச் செல்கிறீர்கள்
உறவினர் விழா காணச் செல்கிறீர்கள்

காங்கிரசு எதேச்சாதிகாரத்தின் கேடுபாடு பற்றிய விளக்கம் கேட்கிறீர்கள் — பொதுவான கருத்தைத் தருகிறீர்கள்—போதாது!

சான்றுகள், புள்ளி விவரம், ஆய்வுரை ஆகியவைகளைத் தரவேண்டும்

**'நம் நாடு'**

இவைகளைத் தருகிறது!

இதழ் ஒன்றை எப்போதும் உங்கள் சட்டைப் பையில் வைத்துக்கொள்க - விளக்கம் கேட்டோருக்கு எடுத்துக் காட்ட! **'நம் நாடு'**

**'நம் நாடு'** உங்களிடம் இருப்பது கழகத் தலைவர்கள் உங்களுடன் இருப்பதற்கு ஒப்பாகும்!

**'நம் நாடு'**

உங்களிடம் இருக்கிறதா?

# கழுத்தில் இருப்பதும், காலில் உள்ளதும்...

எனக்கும் எதாச்சம் தராமலா போவிங்க கிடைக்கறதிலே...கொழந்தையோட பேச்சை எடுத்தா, எவ்வளவு உருகிப்போறு தெரியுமா மெய்யம்மே! அடே அப்பா! அது அரசாளப் பிறந்ததாம்!!

அரசு ஆளும், ஆளும்டி பவுனும்பா, ஆளும். இவ கிளம்பட்டும் தீ மிதிக்க; அந்தக் கோட்டான் என்ன கதி ஆகுதுபார்! அரசு ஆளப்போகுதாமா அவ கொழந்தை——கிடக்கட்டும். கைகொழந்தைக்கு யாரு தான் காவலு?

குடும்பத்தோடு கிளம்புறு மெய்யம்மெ. கொழந்தைக்கு காவல் இருக்க, பொதுஊரான்தான் கிடைப்பான்.

பொதுஊரானு? அவனுக்குத் தூபம் போட்டு விடலாமே, நாம ஒண்ணு சேர்ந்தா...

வழி இருக்குது அதுக்கு. நான் முன்னமேயே யோசனை செய்து வைத்திருக்கறேன்...

பலே பலே! என்ன யோசனை? சொல்லு, சொல்லு...

பச்சைக் கொழந்தை, பாவம்! அதைத் தனியா விட்டு விட்டு, இவங்களோட போக்கைப்பாரு, தீமிதிக்கக் கிளம்பிவிட்டாங்க, இது முறையா சொல்லு, இது நியாயமா சொல்லு! அப்படி இப்படின்னு பேசினுப் போதும் பொதுரரான் உருகிப் போய்விடுவான். தீமிதிக்கப் போனவங்களை வெறுத்துவிடுவான்...

கொழந்தைக்குக் காவல் இருக்கமாட்டானு—

நாம சொல்கிறபடி அவனைக் கேட்கச் செய்யலாம் பாவம், கொழந்தையை உன்னுலே பாதுகாக்க முடியாது, கொடு இப்படி, நான் பார்த்துக்கொள்றேன்னு சொன்னு, கொழந்தையைக் கொடுத்துவிடுவான்......

கழுத்திலே இருக்கறது எனக்கு, இப்பவே சொல்லிவிட்டேன்.

காலிலே உள்ளதும் கையிலே உள்ளதும் எனக்கு சரிதானே—

மெதுவாப் பேசு, யார் காதிலேயாவது விழுந்து விடப் போகுது. மெய்யம்மை குடும்பத்தோட கிளம்பற மட்டும் வெளியே மூச்சுவிடாதே, விவரத்தை; காரியம் கெட்டுவிடப்போகுது.

❀

மெய்யம்மையிடம் பேசிவிட்டு, வெளியே வேறு வேலையாகச் சென்ற கருத்தப்பன் சாவடிப் பக்கத்திலே **கோட்டையூரானும் கோலெடுத்தானும்** பேசிக் கொண்டிருக்கக் காண்கின்றான்.

ஒரு புறம் ஒதுங்கி நின்று அவர்கள் பேசுவதைக் கேட்கிறான்.

தீ மிதிக்கிறதுக்குத் துணிவு இல்லாத பயன்னு இனிப் பேச முடியாது அண்ணே! கருததப்பன் குடும்பத்தோட கிளம்பப்போறுன் தீ என்னுதான் செய்துவிடும் பார்க்கலாம்னு கூறிக்கிட்டு...—

பலே! பலே! அதைத்தானே நான் எதிர்பார்த்தபடி இருந்தேன்! இந்தப்பய, தீமிதிக்க வேண்டியதுதான், தீய்ந்துபோகும் இவனுடை திட்டம்...தெரியுமா .........

கோட்டையூர் அண்ணே! விவரமாச் சொல்லுங்க.

கோலெடுத்தான்! உனக்குத் தெரியுமேல்லோ, கருத்தப்பனுடை திட்டம்—...நம்ம கோட்டையூர்லே அவனுடைய கொழந்தை இருக்கே, உதயசூரியன், அதுக்கு இடம்பிடிக்கற எண்ணம்.

ஆமாம்! உதயசூரியனுக்குக் கோட்டையூர்லே இடம் கிடைக்கும்னுதான் சொல்றுன்.....

சொல்றுனேல்லோ! இப்ப, இவன் தீமிதிக்கக் கிளம்பப்போறுனேல்லோ, அதோட தீர்ந்துபோய் விடும் கோட்டையூர்லே இடம் பிடிக்கற திட்டம்......

என்! தீ மிதிக்கறதிலே ஆசாமி தொலைஞ்சுப் போயிடுவான். அப்படி நினைக்கறிய?

அது அல்ல அப்பா! உனக்கு ஒரு இரகசியம் தெரியாது. நம்ம பெரியவரு இல்லே, **தொலைதூரத்தான்** அவருடைய பேச்சை மீறி கோட்டையூராகட்டும் வேட்டையூராகட்டும், நடக்க முடியுமா?

முடியாது! ராட்டையூர் ராஜா இல்லையா அவரு, அதனுலே.

அந்த தொலைதூரத்கான் என்ன உத்திரவு போட்டிருக்கிருரு தெரியுமா, தீ மிதித்தவன், கோட்டையூர் பாதையிலே நடக்கக்கூடாதுன்னு உத்திரவு.

தீ மிதிக்கப்போனு, கோட்டையூர் போகக் கூடாதா......

கோட்டையூர் பாதையிலேகூட நடக்கக்கூடாது. அதுதான் புது உத்திரவு.

அப்படியானு, தீமிதிச்சிவிட்டு, கருத்தப்பன் வீடு திரும்பியதும், கோட்டையூரை அடியோடு மறந்து விடணும்......

ஆமாம், ஆமாம்; உதயசூரியன் கோட்டையூர் போய் அரசாளப் போகிறுன்னு பேசிக்கொள்வானேல்லோ கருத்தப்பன், அந்த எண்ணத்திலே மண் விழுந்துது......

ஊரார். பாவம், உதயசூரியனுடை இவன் கோட்டையூர் போகப்போறுன்னு பேசிக்கொள்கிருங்க......

ஆமாம்......தீமிதித்தா கோட்டையூர் பாதையிலேயே நடக்கக்கூடாதே. புது உத்திரவு.

பாதையிலேயே நடக்கக்கூடாதுன்னு, கோட்டையூர் போய் கொலுவிருக்கிறது எப்படி......

நடக்காதுங்கறேன். பவுனும்பாளும் அவளோட புருஷன் வலைவிரித்தானும் திட்டமிட்டு, மெய்யம்மையைத் தூண்டிவிட்டாச்சி.

தீமிதிக்கக்கிளம்பறதுக்கா! ஒத்துக்கிட்டாங்களா .........

# கூட்டு உடைந்தது! திட்டம் அழிந்தது!!

ஒத்துக்கொள்ளாம இருப்பாங்களா! பவுனும்பா தான் பச்லை சிரிப்பிலே கெட்டிக்காரியாச்சே! அடி ஆத்தே! நெருப்புன்னு பயமா உனக்கும் உங்க வீட்டுக்காரருக்கும்னு பேசி, மெய்யம்மைக்கு ரோஷமூட்டி விட்டிருக்கறு......

சரியான ஆசாமிதான்! ஏன் தூண்டுருன்னு யோசிக்க ப்ராஷம் இடம்கொடுக்காது......

ஆமாம்...பவுனுப்பாளுக்கு இருக்கிற எண்ணம். தீமிதிக்க மெய்யம்மையோட குடும்பம் போய்விட்டா. குழந்தை இருக்குமேல்லோ வீட்டிலே, அதோட கழுத்திலே கையிலே உள்ளதைப் பார்த்துக்கொள்ளலாம் என்பதுதான்.

அடடே! அவளோட திட்டம் அதுவா! ஆக, தீமிதிக்கப்போனு, குழந்தை கோட்டையூர் போக முடியாது.........

ஆமாம்...ஆமாம்...எல்லாம் இவரோட ஏற்பாடு ......தெரியுதா......என்னமோ பெரியதிட்டம் போட்டானே கருத்தப்பன், இப்ப பார்த்யா, அவனோட எண்ணத்திலே மண்விழுது......

தீ மிதிச்ச தீரன் கருத்தப்பன், அதனுலே அவனோட மகன் உதயசூரியனுக்கு, கோட்டையூர்லே இடம் கொடுக்கணும், அதுதான் மரியாதை என்று நினைக்க மாட்டாங்களா...

அவனேகூட அப்படித்தான் நினைப்பான்; தீ மிதிச்சது பற்றிப் பேசினு, கேட்கிறவங்க மனசு பாகா உருகும்னு எண்ணிக்கிட்டுத்தான் இருப்பான். அவன் கண்டானு; தீயை மிதிச்சா, கோட்டையூர் பாதையிலே கூட அடி எடுத்து வைக்க முடியாது என்கிற விஷயத்தை...

எக்கச் சக்கமா மாட்டிக்கிட்டான் பய...

இளம்பட்டும் தீ மிதிக்க...பிழைச்சி வந்தாக்கூட, பயஇந்தப்பேச்சூரோடு இருந்துவிடவேண்டியதுதான். ஒரு அடி கூட கோட்டையூர் பக்கம் போக முடியாது ...பாரேன், திண்டாடப் போறதை...

❋

தீ மிதிக்கும் திருவிழாவில் கலந்துகொள்ளும்படி, ஏன் தூண்டிவிடுகிறார்கள் என்பது கருத்தப்பனுக்குப் புரிந்துவிட்டது.

தீ மிதிப்பதோ, திட்டில் இருப்பதோ, எல்லாம், உதயசூரியன் கோட்டையூர் போய்ச்சேர உதவும் என்பதுதான் அவன் எண்ணம்.

கோட்டையூரில் உதயசூரியன் இடம் பெற்றுல்தான் பாலூர், தேனூர் போலாகும என்று கூறி ஆட்சியைப் பிடித்துக்கொண்ட கோட்டையூரான், கோலெடுத்தானைத் துணைக்கு வைத்துக்கொண்டு மக்களைக் கொடுமைப்படுத்தும் அக்ரமத்தை ஒழிக்க முடியும்.

அதற்கு வாய்ப்புக் கிடைக்கவிடாமல் தடுத்துவிட வேண்டும், கோட்டையூர் பாதையிலேகூட நடந்திடக் கூடாது என்று உத்திரவு போடுவது, சூதான ஏற்பாடு.

இவ்விதமான சூது சூழ்ச்சிகளைக் கூட முறியடிக்கும் வல்லமை கோட்டையூர் போனுல்தான் முடியும்.

ஆகவே, கோட்டையூருக்கு உதயசூரியன் சென்று நாட்டை பெருவளநல்லூர் ஆக்கவேண்டுமானுல், தீ மிதிக்கச் செல்லக்கூடாது என்ற முடிவுக்கு வந்தான் கருத்தப்பன், சூழ்ச்சிக்காரரின் திட்டம் அறிந்ததால்.

வீடு சென்று மெய்யம்மையிடம், கூறினுன், உதயசூரியனை கோட்டையூர் நுழையமுடியாமல் தடுத்திட தீட்டப்பட்டுள்ள சூழ்ச்சி பற்றி.

மெய்யம்மைக்கு அப்போதுதான் பவுனும்பாள் பசப்பிப் பேசியதன் காரணம் புரிந்தது.

தீ மிதிக்க முடியுமா என்று கேட்டு, ரோஷமூட்டப் பார்ப்பது, நம்மைக் கோட்டையூர் வரவிடாது தடுப்பதற்காகத்தான் என்பது புரிந்ததும், மெய்யம்மை, தீ மிதிக்கச் செல்லத் தேவையில்லை என்று தீர்மானித்தாள்.

தீமிதிக்கப் போவதில்லை, தங்கள் சூழ்ச்சி வெற்றி பெறப் போவதில்லை என்று தெரிந்ததும் பவுனும்பாளும் வலைவிரிப்பானும், கோட்டையூரானும் கோலெடுத்தானும் முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டனர்.

மெய்யம்மை தன் குழந்தை உதயசூரியனை உச்சி மோந்து முத்தமிட்டு, அரசாளப் பிறந்தவனே! உன்னை அழிக்க அல்லவா அவர்கள் சூழ்ச்சி செய்தார்கள், எங்களைத் தீமிதிக்கச் சொல்லும்படி தூண்டிவிட்டு. உண்மை புரிந்தது. உன்னைக் காத்திட முடிந்

## ✓ படிக்காத பாடம்!



"நான் பெரியாரிடம் தயாரானவன். அவர் சொல்லிக்கொடுத்த பாடங்களில் இரண்டைத் தவிர மற்ற எல்லாவற்றையும் படித்துக் கொண்டவன்!

அவர் எனக்குச் சொல்லிக்கொடுத்தது நான் படிக்காத—பின்பற்றுத பாடம் இது:

''மற்றவர்களை மேடையில் ஏற்றுதே!...

''பத்துப் பேருக்குமேல் கட்சியில் சேர்த்தால் கட்சி உடையும்!''

# நோட்டூரும் இருட்டூரும் எங்கே தம்பி!

தது. தீயோர் எண்ணத்தில் தீ விழட்டும் என்று கூறி மகிழ்ந்தாள்.

தீமிதிக்கமாட்டானும்....துணிவு இல்லை...என்று தூற்றிப் பார்த்தான் வலைவிரிப்பான்.

அவனுடை துணிவுபற்றிப் பேசுவது இருக்கட்டும் நீ ஏன் உதயசூரியனைக் கோட்டையூர் பாதையிலேயே நடக்கக்கூடாது தீமிதிக்க அவர்கள் சென்றால் என்று ஒரு புது உத்திரவு போட்டாய்? தைரியம் என்று அகற்றுப் பெயர்! சூது! சூழ்ச்சி! அதை கருத்தப்பன் புரிந்துகொண்டதால்தான், நீங்கள் மூட்டிய தீயிலேவிழ மறுத்துவிட்டார்கள்! இதுபுரிய வில்லையா எங்களுக்கு என்று நாட்டாண்மைக்காரர், தெளிவப்பன் கூறினார்.

நல்ல காரியம் செய்தாயப்பா! பயந்துகொண்டிருந்தோம், அரசாளப் பிறந்தவனை விட்டுவிட்டு நீங்கள் எங்கே தீ மிதிக்கப் போய்விடுவீர்களோ என்று. நல்லவேளை, உங்களுக்கு அவர்கள் சூழ்ச்சி புரிந்துவிட்டது—என்று வாக்களிப்பர் பாராட்டினார்.

தீயிலே தள்ளி, என்றென்றும் உதயசூரியன் கோட்டையூர் நுழையாதபடி செய்துவிடலாமென்று சூழ்ச்சி செய்தோம், முடியவில்லை; இனி, கோட்டையூர் பாதையிலே காவலிருக்கவேண்டும், உதயசூரியனை அழைத்துக்கொண்டு, கருத்தப்பனும் மெய்பம்மையும் வாராதபடி தடுத்திடவேண்டும் என்று கோட்டையூரானும் கோலெடுத்தானும் முனைந்தனர்.

அவர்களுக்குத் துணையாக நோட்டூரான், இருட்டூரான், போன்றார் நின்றனர்.

பயப்படாதே தம்பி! நாங்கள் துணை இருக்கிறோம் என்று கூறி வாக்களிப்பாரும். தெளிவப்பனும், முன்வந்தனர். உதயசூரியன் புன்னகை புரிந்தான்.

✽

அன்பானந்தரே! புதுமையாக இருக்கிறதே உமது கதை; எதற்காக இப்படி ஒரு கதையைக் கூறினீர்கள் என்று கேட்டேன்; அவர் சிரித்துக்கொண்டே "ஏனப்பா! கதையைக் கேட்டதும் உனக்கு கருத்து புரியவில்லையா?" என்று கேட்டுவிட்டு, "இப்போது நீயும் உன்னுடைய உடன் பிறப்புகளும் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? எந்த முயற்சியிலே மும்முரமாக ஈடுபட்டிருக்கிறீர்கள்? தேர்தல் வேலையிலேதானே" என்று ஒரு கேள்வியை எழுப்பினார்.

"ஆமாம்! தேர்தல் வேலையிலேதான்! அது என்ன பாதகச் செயலா? கேவலமானதா" என்று நான் கேட்டேன்.

"ஜனநாயக முறையை ஏற்றுக்கொண்டுவிட்டு, தேர்தல் காரியத்தைக் கேவலமானது என்று கூற முடியுமா. திருமணம் செய்துகொண்டு, குடும்பத்தை நடத்திச் செல்வது கேவலம் என்று சொல்வார் உண்டா? தேர்தல் என்பது ஜனநாயகத்தில் ஏற்பட்டுவிடும் மிக முக்கியமான கடமை. நான் அதைக் குறை கூறவில்லை. இந்தத் தேர்தலில் ஈடுபட்டு படிப்படியாக நீங்கள் முன்னேறி வருகிறீர்கள், இல்லையா?" என்றார்.

"ஆமாம்! பொதுமக்களுடைய நல்லாதரவு காரணமாக......" என்று நான் விளக்கம் தந்தேன்.

"உங்களைப் பொதுமக்கள் துளியும் ஆதரிக்கவில்லை என்று கூறிக்கொண்டு வந்த காங்கிரஸ் கட்சிக்கு, இதனால் ஏமாற்றமும் எரிச்சலும் ஏற்பட்டுத்தானே இருக்கும்?"

"ஆமாம்! கொஞ்சநஞ்சமான எரிச்சல் அல்ல" என்று நான் கூறினேன்.

"அந்த எரிச்சல் காரணமாகத்தான், காங்கிரஸ் கட்சி உங்களைத் தூற்றுகிறது? இல்லையா?" என்று கேட்டார்.

"சாதாரணமான தூற்றலா! பண்புள்ள யாரும் பேசக் கூசிடும் பேச்செல்லாம் பேசுகிறார்கள்; பெரிய இடத்தில் அமர்ந்திருப்பவர்கள் கூட!" என்று நான் கூறினேன்.

"வருத்தப்படுகிறாயா! பைத்யமே! பைத்யமே! அவர்கள் தூற்றத் தூற்றத்தான், அதனை நீங்கள் தாங்கிக்கொள்ள தாங்கிக்கொள்ளத்தான், பொது மக்களுக்கு உங்களிடம் ஒரு பரிவு,

## புரட்சிக் கொள்கை!

கற்குமள வறிவிருக்கும் கன்னி யுள்ளக்
காதலள வன்பிருக்கும் கட்டுப் பாட்டில்
நிற்குமள வுரமிருக்கும் நீண்ட ஊற்றின்
நீரளவு மலரிருக்கும் உள்ளத் தூய்மை
நிற்பளவு புகழிருக்கும நேர்மை யாட்சி
நிறைநன்மை புரியளவே நீடு நிற்கும்!
சொற்சிலம்பம் புரிகின்ற சூழ்ச்சி யாளர்
சொல்தேரா துரிமையொடு தேர்தல் செய்வீர்

பயிரழிக்கும் பூச்சியினை நாமே கொல்வோம்!
பழிசெய்வோர் தாமழிதல் பண்பைக் காக்கும்
உயிரழித்தல் குற்றமெனக் கூறித் தீயோர்
உலவிவர வாய்ப்பளித்தல் நன்று? ஊரார்
வயிறடித்துத் தீமைபுரி வாரை ஆட்சி
வரிசைக்கு ஏற்றுவது மடமை யாகும்
முயற்சியொடு ஆராய்ந்து மூத்த சான்றோர்
முனைந்தாள வாய்ப்பளித்தல் முற்றும் நன்றாம்

இளந்தமிழா! நீவாழ்க! இன்னே நாட்டில்
இருக்கின்ற தீக்கேடு இல்லை யாக!
வளங்கமழும் பேராண்மை ஆட்சி நாட்ட
வரவேண்டும்! சீரார்வ வாழ்வை மீண்டும்
உளமக்கட் கேவழங்க வேண்டும்! உண்மை
உழைப்புக்குத்தொண்டுக்கு ஊக்கம்வேண்டும்
குளமான மேன்மக்கள் கண்ணீர் மாற்றிக்
குடியோம்ப நீபுரட்சிக் கொள்கைகொள்வாய்

—புலவர் தி. நா. அறிவுஒளி.

பற்று ஏற்பட்டிருக்கிறது. அதனையும் அவர்கள் உணர்ந்து கொண்டனர். ஆகவேதான் உங்களை எப்படியாவது தேர்தலிலே நிற்கவொட்டாதபடி தடுத்துவிட முயற்சித்தனர். சாதாரண முறைகள் போதவில்லை. ஜனநாயகத்தை நடத்துவதாக உலகத்துக்குச் சொல்லிவிட்டு, ஒரு கட்சியைத் தேர்தலுக்கு நிற்கவிடாதபடி, தடை உத்திரவு போடமுடியவில்லை. ஆகவே நேர்வழி கூடாது என்று குறுக்கு வழி சென்று ஒரு சட்டம் உண்டாக்கிக்கொண்டனர். பிரிவினை கேட்பவர்கள் தேர்தலிலே ஈடுபடக்கூடாது என்ற சட்டம். ஆஹா! சட்டம் போட்டா எங்களை மட்டந்தட்டப் பார்க்கிறீர்கள் என்று நீங்கள் கூவிக் கொந்தளித்து, சட்டத்தை மீறுவீர்கள், உடனே தேர்தலில நிற்கும் உரிமையை அழித்துவிடலாம், போட்டி இருக்காது, போகபோக்கியம் தரும் பதவி என்றென்றும் இருக்கும் என்ற சூழ்ச்சி. அதை நீங்கள் உணர்ந்துகொண்டீர்கள், அதனால் ஜனநாயகம் பிழைத்தது. அதைத்தான் நான் கதையாகக் கூறினேன்! நீமிதிக்கிற திருவிழாவுக்கு, பவுனம்மாளின் பேச்சைக் கேட்டுக்கொண்டு, மெய்யம்மை போயிருந்தால், அவள் குழந்தைக்கு என்ன கதி நேரிட்டிருக்கும்!'' என்று விளக்கினார்.

"பெரியவரே! உம்மைப்போன்றவர்கள் உண்மையை உணர்ந்து ஊராருக்கு உரைப்பீர்கள் என்பதிலே எங்களுக்கு உள்ள நம்பிக்கைகாரணமாகவே, நாங்கள், காங்கிரஸ் அரசு தீட்டிய சூழ்ச்சிக்குப் பலியாகக் கூடாது என்று முடிவெடுத்தோம்'' என்றேன் நான்.

"நல்ல முடிவு! உதயசூரியன் நாடாளும் வாய்ப்புப் பெற வழி கிடைத்திருக்கிறது.'' என்றார் அறிவானந்தர்.

"உங்கள் பேராதரவும் நல்வாழ்த்துக்களும் வேண்டும் ஐயா!'' என்றேன்.

"தாராளமாக! ஏராளமாக!'' என்று அறிவானந்தர் கூறினார் மலர்ந்த முகத்துடன்.

❁

யார் அந்த அறிவானந்தர்! ஆறேழு ஆண்டுகள் அரித்துவாரத்தில் ஆசிரமம் நடத்திய மகானா? அல்லது கேட்டதும் ஆயிரக்கணக்கான ரூபாய்களை நன்கொடையாக அள்ளிக் கொடுத்திடும் சீமானா? என்று கேட்கிறாயா, தம்பி!

அறிவானந்தர், உழைத்து உருக்குலைந்த நிலையில் உள்ள ஒரு எளியவர்! கவலைக் கோடுகள் படிந்துள்ள முகம்! கள்ளங் கபடமற்ற மனம்!! தான் படுகிற அல்லலையும் தொல்லையையும், தன் பிள்ளைகளாவது படாமல், நிம்மதியான வாழ்வு பெற வேண்டுமே என்ற ஏக்கம். தன்னைப் போன்றவர்கள் கொண்டுள்ள ஏக்கத்தைப் போக்கிடத்தக்க ஒரு நல்லாட்சி அமையவேண்டுமே என்ற எண்ணம் கொண்டவர். அமையும் என்ற நம்பிக்கை கொண்டவர்!

மிட்டா மிராசு காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக அலையும் திருக்கூட்டத்தினர் அல்ல! உழைப்பின் பலனைப் பெறவேண்டும் என்று எண்ணிடும் தூயவர்.

அவர் பர்மிட்டும் லைசென்சும் கேட்கவில்லை; பாலும் தேனும் ஓடிடவேண்டும், அள்ளி அள்ளிப் பருகிடவேண்டும் என்ற பேராசைகொண்டவர் அல்ல!

செய்திட ஒரு வேலை! அதிலே ஒரு நீதி, ஒரு நிம்மதி! குடியிருக்க ஒரு இடம்! வயிறாரச் சோறு! மானங்காத்திட ஆடை! நோயற்ற வாழ்வு! ஓய்வு நேரம், உள்ளத்துக்குக் குளிர்ச்சி தர!—இவைகளைத்தான் எதிர்பார்க்கிறார்.

எங்கே இருக்கிறார் அந்த அறிவானந்தர்? என்று தம்பி! கேட்கிறாய்? எங்கும் இருக்கிறார்! இந்நாட்டு உழைப்பாளியைத்தான் சொல்கிறேன்.

அவரிடம் பேசிப்பாரேன்! ஆதரவும் புரியும்! நல்வாழ்த்தும் கிடைத்திடும்.

அதனைப் பெற்றிடுவதிலே மட்டும், தம்பி! நீ வெற்றி பெற்று விட்டால், பிறகு, உன் ஆட்சி அமைவதைத்தடுத்திடும் வல்லமை எவருக்கும் இருக்கப் போவதில்லை.

அவர், ஏழை; உழைப்பாளி; கவலை நிரம்பியவர்' ஆனால் தம்பி! மறந்துவிடாதே! அவர் இந்நாட்டு மன்னர்!

அவர் 'கோலம்' பளபளப்பு அற்றது! குரல் வலிவற்றது! ஆனால், அரசுகளை ஆக்கவும் அழிக்கவும் தேவைப்படும் ஆயுதம் அவரிடம் இருக்கிறது! ஓட்டுச் சீட்டு!

அண்ணன்,

அண்ணாதுரை

ஏஜண்டுகள் தேவை

மலையாள வைத்தியசாலை

"கிஸ்கோ" (ஜில்லா ஏஜண்ட்)
மலையாள பார்மஸியில் தயாராகும் பவர்கூடிய ஆசவ அரிஷ்டங்கள் விற்பனைசெய்ய எல்லா ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை

எங்களது ஏஜண்டுகள்:

K. M. சாகுல்ஹமீது, 95, அபிபுல்லாரோடு, சென்னை-17
S. கந்தசாமி, என். கோவில்பட்டி, நத்தம்.
D. ரெங்கநாதன், நல்லமநாய்க்கன்பட்டி, தாராபுரம்.
K. சாகுல்ஹமீது, டர்னபுரம், கொடைக்கானல்.
இராஜகோபால், கவர்மெண்ட் ஆஸ்பத்திரிக்கு அருகில் [மணப்பாறை.
சண்முக முதலியார், ஒட்டன்சத்திரம்.

உடனே விண்ணப்பிக்க:

State Sole Agent: சுலைமான்
மலையாள வைத்தியசாலை,
நெ. 145, R. S. ரோடு, :: திண்டுக்கல்-3




## 2—16

## 'இதோ அஞ்சலை!'

பலகணியின் வழியாக இறங்கி வந்தவன், அலறிய அஞ்சலையைப் பார்த்துக் கத்தாதே என்று வேண்டுபவனைப்போலச் சமிக்ஞை செய்துவிட்டு, 'பயப்படாதீர்! சோலையப்பனின் ஆள் நான்! ஓலை கொண்டுவந்திருக்கிறேன்! என்று மெதுவாகக் கூறினான்.

'அத்தானா அனுப்பினார்?' என்று ஆவத்தோடு கேட்டபடி கட்டிலைவிட்டிறங்கினாள்.

'திருடன்! திருடன்! பிடி! பிடி! விடாதே! விடாதே!' என்று அந்தக் கிளி தலையை வேகமாக ஆட்டி ஆட்டிக் கத்திற்று.

பணிப்பெண்கள் ஓடிவரும் சப்தம் கேட்கவே, என்ன செய்வது என்பது புரியாமல் திகிலோடு வாயிற்படியின் பக்கம் பார்த்துவிட்டுத் திரும்பவும் அவன் பக்கம் முகத்தைத் திருப்பினாள்.

அவள் அப்படிப் பார்த்துவிட்டு, இப்படித் திரும்பக் கண் சிமிட்டும் நேரந்தான் பிடித்திருக்கும். அதற்குள் அங்கு நின்றிருந்தவனைக் காணோம்! எப்படியோ மாயமாக மறைந்துவிட்டான!

'எங்கு ஒளிந்துகொண்டான்?' என்று அவள் விழிகள் திருதிருவென விழித்த நேரத்தில், பணிப்பெண்கள் உள்ளே ஓடிவந்தனர்.

'ஏனம்மா அலறினீர்கள்? என்ன நடந்தது?' என்று மூச்சு வாங்க அல்லி வினவினாள்.

'திருடன் திருடன் என்று கிளி வேறு கத்திற்றே! எவன் வந்தான்? எப்படிப் போனான்?' என்று கனகா ஆரம்பத்துவிட்டாள்— அல்லியின் கேள்வி முடிவதற்கு முன்பே!

முல்லையும் அன்னமும் அந்த விசாலமான அறையின் மூலை முடுக்குகளில் எல்லாம், எவனாவது பதுங்கிக்கொண்டு இருக்கிறானா என்று தேடிப் பார்த்துவிட்டு, பலகணியின் வழியாகக் கீழே எட்டிப் பார்த்துவிட்டு 'யாரையும் காணோம் என்ற ஏமாற்றக் குரலோடு கட்டிலின் பக்கம் வந்து நின்றனர்.

இவ்வளவு அமர்க்களத்தையும் பார்த்தபடி, அஞ்சலை மௌனமாக நின்றிருந்தாள்.

'ஏனம்மா, பேசாமல் இருக்கிறீர்கள்? நடந்தது என்ன, சொல்லுங்களம்மா! போர் வீரர்களை அழைக்கட்டுமா — பயமாக இருந்தால்? என்று பதைபதைப்போடு பேசிய அல்லியை, குறும்போடு அஞ்சலை பார்த்தாள்.

'போர்வீரர்கள் வந்தால், என்னைப் பயமுறுத்திய அந்த உருவத்தைத் துரத்திப் பிடித்து இழுத்துக் கட்டி நம்முன் கொண்டுவந்து நிறுத்திவிடுவார்களா?'

என்னம்மா அவ்வளவு அலட்சியமாகச் சொல்லிவிட்டீர்கள் — சேர நாட்டுப் போர் வீரர்கள் சாதாரணமானவர்கள் அல்லர்! காற்றையும் மேகத்தையும்கூடக்கட்டிப்பிடித்து இழுத்துவரக்கூடிய ஆற்றல் மிக்கவர்கள்!'

'அசகாயசூரர்களாக இருக்கலாம் — இல்லையென்று நான சொல்லவில்லை! ஆனால் நான் கண்டு பயந்த அந்த உருவத்தைப் பிடிக்க இவர்களால் இயலாது! வீண் சிரமம் எதற்கு? நீங்கள் போகலாம் — நானே பார்த்துக்கொள்கிறேன்!' என்று அஞ்சலை கையிலிருந்த கத்தியின் முனையைத் தடவிகொண்டே கூறினாள்.

'போர் வீரர்களால் முடியாதது — உங்களால் மட்டும் முடிந்துவிடுமா? முடிந்தாலும், அந்தச் சிரமத்தைத் தங்களுக்கு நாங்கள் கொடுக்கலாமா? தெரிந்தால் இளவரசர் எங்களை சும்மா விடுவாரா? உயிரோடு சமாதி கட்டிவிடமாட்டாரா?—கனகா, நீ போய் உடனே நான்கைந்து போர்வீரர்களை கூட்டிக்கொண்டு வா!' என்று அல்லி கூறியதும், கனகா புறப்பட்டாள்.

'நில் கனகா! போர் வீரர்கள் வந்தாலும் அந்த உருவத்தைப் பிடிக்க முடியாது' என்று நான் சொல்லிக்கொண்டே இருக்கும்போது, அவசியமில்லாமல் எதற்காக அவர்களை அழைத்துவரப்போகிறாய்? நான் பயந்தது—வேறெந்த உருவத்தையும் கண்டல்ல — என் உருவத்தைக் கண்டே! ஏன் விழிக்கிறீர்கள்? நான் சொல்வது புரியவில்லையா? உட்கார்ந்து ஏதோ யோசித்துக்கொண்டிருந்த நான், சட்டென்று முகத்தை இப்படித் திருப்பினேன்! ஏதோ உருவம் தெரிந்தது! அவ்வளவுதான், பயந்து அலறிவிட்டேன்! என் அலறலைக் கேட்டுக் கிளியும் திருடன் திருடன் என்று கதறிவிட்டது! அலறிய மறுநொடியே எனக்குத் தெரிந்துவிட்டது, நான் கண்டு பயந்தது என் நிழலை என்று!''

"உங்கள் நிழலைக் கண்டு, நீங்களே பயந்துவிட்டீர்களா? அதுதானே பார்த்தோம், இந்த மாளிகைக்குள் ஒருகாக்கைகூட நுழைய முடியாதபடி சுற்றிலும் போர் வீரர்கள் காவல்புரிய—எவன் எப்படி வந்தான் என்று?''

"அவ்வளவு தொந்தவள், எதற்காக நான் சொல்லியதைக் கேட்டு பயந்துபோனாய்? என்ன இதற்குள்ளாகவே புறப்பட்டுவிட்டீர்கள்?'

'இன்னமும் பயமாக இருக்கிறதா, துணைக்கு இந்த அறையில் நான் இருக்கட்டுமா அம்மா?'

"எனக்குப் பயமுமில்லை—துணையும் வேண்டாம்? உனக்குத் துணையாக இந்தக் கிளியையும் எடுத்துக்கொண்டு போ! நிழலைக் கண்டு நான் அலறினால்—என் அலறலைக் கேட்டு இது கதறி, இந்த மாளிகையையே ஒரு கலக்கு கலக்கிவிடுகிறது! இரவில் வேண்டாம். பகலில் மட்டும் இது இங்கிருக்கட்டும்!''

கிளியைக் கைப்பிடித்துக்கொண்டு, "சரியம்மா!'' என்று அல்லி சொல்லிவிட்டு, மற்ற தோழிகளையும் அழைத்துக்கொண்டு வெளியே சென்றாள்.

அவர்கள் சென்றுவிட்ட பிறகு, அறையின் கதவைத் தாளிட்டுக்கொண்டு, பலகணியின் அருகே வந்து நின்றாள் அஞ்சலை.

"வந்தவன் ஒரு பெரிய மாயாவியாக இருப்பான் போலிருக்கிறதே!

கட்டுக்காவலையெல்லாம் தாண்டிக் கொண்டு எப்படியோ உள்ளே வந்துவிட்டிருக்கிறானே! பணிப் பெண்கள் வருவதை அறிந்ததும், எங்கோ மாயமாக மறைந்துவிட்டானே!'' என்று சிந்திர்தவாறு அவள் திரும்பவும் கட்டிலின்மீது வந்து உட்கார்ந்தாள்.

"அம்மா!'' என்று அழைத்துக் கொண்டே, கட்டிலுக்குச் சிறிது தூரத்திலிருந்த பெரிய மரப்பெட்டியொன்றைத் திறந்துகொண்டு, அவன் வெளியே வந்தான்.

இவ்வளவு நேரமும், அந்த மரப் பெட்டிக்குள்ளா இருந்தாய்?''

"ஆமாம அம்மா, நீங்கள்தான் என்னைக் கண்டதும் கத்திவிட்டீர்களே! அதைத் தவிர வேறு எங்கு ஒளிந்தாலும் அகப்பட்டு விடுவோம் என்று எனக்குத் தெரியும்!''

"உண்மைதானப்பா, அந்தப் பெட்டியைத் தவிர, மற்ற இடங்களில் எல்லாம் பணிப் பெண்கள் தேடிப் பார்த்தார்கள்!''

"பணிப் பெண்கள் எங்கெங்கு தேடுவார்கள் என்பது எனக்குத் தெரியும் — அதனால்தான் அந்தப் பெட்டியைத் தேர்ந்தெடுத்தேன்!'' என்று வியர்வையைத் துடைத்துக் கொண்டு, அவன் அருகே வந்து, அந்த ஓலையைத் தந்தான்.

'நான் இங்கு அடைபட்டிருப்பது எப்படி அத்தானுக்குத் தெரியும்?'' என்று கேட்டுக்கொண்டே, அந்த ஓலையைப் பிரித்தாள்.

அன்புள்ள அஞ்சலைக்கு,

அறிவொளி அடிகளைப் பார்க்கச் சென்றேன். நடந்ததைக் கூறி, அவர் கண்ணீர் வடித்தார். முதலில் தூமகேதுதான், 'இந்த அக்கிரமத்தைச் செய்திருப்பான் என்று ஆத்திரமடைந்தேன். ஆகவே அவன் நடமாடும் இடங்களிலெல்லாம் கவனிக்க ஆட்களை நியமித்தேன். கடைசியில் ஒரு நாள், புத்தபுரத்திலுள்ள ஒரு நண்பர் மூலம் நீ இருக்கும் இடம் தெரிந்தது. கனகசேனனிடமிருந்து உன்னை மீட்டு வர நம்பிக்கையான இருவரை அனுப்பியிருக்கிறேன்!

இந்த ஓலை தருபவனோடு தக்க சமயம் பார்த்து, அந்த மாளிகையை விட்டு வெளியேறி விடு. பிறகு அவன் உன்னை என்னிடம்கொண்டு வந்து சேர்த்துவிடுவான். அஞ்சாதே! நான் அனுப்பியிருப்பவர்கள் — உன் அண்ணன் பொன்னையாவிற்கும் — எனக்கும் மிகவும் வேண்டியவர்கள். பூரணமாக நம்பக்கூடியவர்கள். தங்கள் உயிரை விட்டாலும் விடுவார்களே அன்றி, வழியில் உனக்கு ஒரு ஆபத்தும் வர விடமாட்டார்கள். உடனே புறப்பட்டு விடு.

அன்புள்ள
சோலையப்பன்.

இந்த ஓலையைப் படித்ததும், அஞ்சலையின் கண்களில் நம்பிக்கையின் ஒளி வீசிற்று

"அத்தான் எங்கு இருக்கிறார்?'' என்று தன் மனத்தில் பொங்கிய மகிழ்ச்சியை அடக்கிக்கொண்டு கேட்டாள்.

"சேர நாட்டின் எல்லையைக் கடந்ததும் கலகல்லூர் என்றொரு ஊர் இருக்கிறது! அங்கு இருக்கிறார் அம்மா, அவர்! இப்பொழுதே புறப்படத் தாங்கள் தயார்தானே?''

"அதென்னப்பா, அப்படிக் கேட்கிறாய் கூட்டில் சிக்கிய கிளி, எப்பொழுது தப்பியோடுவது — எப்படித் தப்பியோடுவது — என்றுதானே துடிதுடித்திருக்கும். மாளிகையைச் சுற்றிலும் போர் வீரர்கள் காவலிருக்கிறார்களே — எப்படித் தப்புவது?

"அந்தப்பயம் தங்களுக்கு வேண்டாம்! இந்தமாளிகையின் வடபுறத்தில் ஒரு பெரிய மாமரமிருக்கிறது. அதன் ஒரு கிளை, மாளிகைத்தோட்டத்திற்கு வெளியே வெகுதூரம் நீட்டிக்கொண்டிருக்கிறது. அப்பக்கத்தில் செடிகள் புதர்போல் அடர்ந்திருப்பதால், போர் வீரர்கள் போகவரச் சிறிது சிரமமாக இருக்கும்! ஆகவே அப்பக்கமாக நாம் தப்பிச் சென்றுவிடலாம்! நான் வரும்போது ஒரு பெரிய கயிறும் கொண்டுவந்தேன. அதைக் கீழேயே வைத்திருக்கிறேன்! இதோ இறங்கி அந்தக் கயிற்றின் ஒரு முனையை மேலே வீசியெறிகிறேன் அதைப் பிடித்து ஒரு கூடத்தில் பலமாகக் கட்டிவிட்டு, அதன் வழியாகக் கீழே இறங்கிவிடுங்கள்! பிறகு நான் அழைத்துப் போகிறேன்!

"சரியப்பா!'' என்று அஞ்சலை சொல்லியதும், அவன் பலகணியின் வழியாக இறங்கிச் சென்று சொல்லியபடிக் கயிற்றை மேலே வீசினான்.

அந்த மாளிகையைக் கடந்து அவர்களிருவரும் சிறிது தூரம் சென்றதும், ஒரு மரத்தின் அடியில் யாரோ ஒருவன் ஒரு குதிரையின் பக்கத்தில் நின்றிருப்பதைக் கண்டதும், அஞ்சலை பயந்து போனாள்.

"பயப்படாதீர்கள் அம்மா, அவன் நம் ஆள்தான்!'' என்று உடன் வந்தவன் சொன்ன பிறகுதான், அவளால் மேலே அடியெடுத்து வைக்க முடிந்தது.

மரத்தின் அடியை அடைந்த பிறகுதான், அங்கு வேறு இரண்டு குதிரைகள கட்டப்பட்டிருப்பது, அவளுக்குத் தெரிந்தது.

மூன்று குதிரைகளின்மீது மூவருமாகப் புறப்பட்டனர். அந்தக் குதிரைகள் காற்று வேகத்தில் பறந்தன. பொழுது புலர சிறிது நேரமிருக்கும்போது, அவர்கள் சேர நாட்டின் எல்லையை நெருங்கிவிட்டார்கள்

முன்னால் சென்றவன் தன் குதிரையை நிறுத்தவே, அவனுக்குப் பின்னால் சென்ற அஞ்சலையும், அவனைத் தொடர்ந்து சென்ற மற்றொரு வீரனும் தம் தம் குதிரைகளை இழுத்து நிறுத்தவேண்டியவர்களானார்கள்.

"இதோ தெரியும் குளத்தில் கொஞ்சம் தண்ணீர் குடித்துவிட்டுச் செல்லலாமா?'' என்று ஓலை கொண்டுவந்து கொடுத்தவன் கேட்டுக்கொண்டே, குதிரையை விட்டுக் கீழே இறங்கினான்.

மூவருமாக நடந்து அந்த குளத்தை அடைந்தார்கள்.

தண்ணீர் குடித்துவிட்டுக் கரையை அடைந்தபோது ஒருவன் மற்றொருவனைப் பார்த்து தீப்பந்தங்களைக் கொளுத்திக்கொள்ள வேண்டாமா என்று கேட்டான்.

"நிலவுதான் பால்போல் காய்கிறதே — இவ்வளவு தூரமும்வந்துவிட்டோம் — பொழுது புலரப் போகும் நேரத்தில் தீப்பந்தம் எதற்கு?'' என்று அஞ்சலை கேட்டாள்.

"இப்பொழுது நாம் பெரிய காட்டினுள் போகப் போகிறோம், அம்மா! கொடிய விலங்குகளின் நடமாட்டம் அதிகமாக இருக்கும்! தீப்பந்தங்களைக் கண்டால், அவை பயந்து ஓடிவிடும்!' என்று ஒருவன் சொன்னதும், மற்றொருவன் தீப்பந்தங்களைக் கொளுத்தினான்.

"ஏனப்பா, எங்கள் வீட்டிற்கு எப்பொழுதாகிலும் நீங்கள் வந்திருக்கிறீர்களா?'' என்று அஞ்சலை கேட்டுவிட்டு தீப்பந்தத்தின் வெளிச்சத்தில் அவர்களின் முகத்தை நன்றாகப் உற்றுப் பார்த்தாள்.

"உங்கள் வீட்டிற்கா? ஓகோ வந்திருக்கிறோம் — வந்திருக்கிறோம்!''

"உங்களை ஒருமுறை கூடப் பார்த்த கவனமில்லையே!''

"போங்கம்மா, உங்களை நாங்கள் எத்தனையோ முறை பார்த்திருக்கி

றோமே! உங்கள் அண்ணா உடல் சுகமில்லாமல் படுத்திருந்தபோது கூட நாங்கள்வந்து பார்த்தோமே!"

"அண்ணா உடல் சுகமில்லாமல் படுத்திருந்தாரா — எப்பொழுது?" என்று சந்தேகத்தோடு கேட்டுக் கொண்டே, அவர்களின் முகத்தை மாறி மாறிப் பார்த்தாள்.

"ஓகோ, அது உங்களுக்குத் தெரியாதம்மா—நீங்க அப்பொழுது தவழும் சிறு குழந்தை! உங்கள் அப்பாதான் எங்களை எப்பொழுதும் அண்ணா பக்கத்திலேயே இருக்கும்படிக் கூறுவார்!"

"நான் பிறந்த மறு மாதமே, என் அப்பா இறந்துவிட்டாரே?"

"இறப்பதற்கு முன்புதான் சொல்லுகிறோம்" என்று ஓலை கொடுத்தவன் திணறிப் பேசினான், உடனே மற்றொருவன் 'என்னம்மா ஏதோ சந்தேகப்பட்டு பேசுகிறீர்கள்; உன் அண்ணா செத்தபோது—அழுத உங்கள் அம்மாவிற்கு நான் தானே ஆறுதல் சொன்னேன்!' என்று மிகவும் கெட்டிக்காரத்தனமாகப் பேசுவதாக எண்ணிக் கொண்டு கூறினான்.

அவர்கள் முகத்தை அஞ்சலை திரும்பவும் உற்றுப்பார்த்தாள். விழிக்கும் அவர்களின் பெரிய கண்களைக் கண்டதுமே, அஞ்சலைக்கு உண்மை புலனாகிவிட்டது.

"கனகசேனனின் சிறையினின்றும் தப்பி, வேறொரு வஞ்சகன் விடுத்த வலையில் அகப்பட்டுக் கொண்டேன்! என்று மனத்திற்குள்ளேயே சொல்லிக்கொண்டாள். பயத்தால் அவள் நெஞ்சு தடக் தடக் என்று அடித்துக்கொண்டது.

"இவர்களிடமிருந்து எப்படியாவது தப்பியோடிவிட வேண்டும்! இல்லையேல் எருமையின் காலில் பட்ட தாமரை மலராகிவிடுவேன் நான்! இவர்கள்மீது கொஞ்சங் கூடச் சந்தேகப்படுவதாகவே காட்டிக்கொள்ளக்கூடாது! காட்டினால், கட்டாகக் கட்டித் தூக்கிக்கொண்டு போய்விடுவார்கள்! அவர்கள் எது சொன்னாலும் உண்மை உண்மை என்றே சொல்லிக்கொண்டு போய் சரியான சமயமாகப் பார்த்து காட்டிற்குள் நழுவிவிடவேண்டும்!" என்று அவள் மனத்திற்குள்ளேயே முடிவு செய்துகொண்டாள்.

"என்னம்மா யோசிக்கிறீர்கள்?" என்று ஒருவன் கேட்டான்.

"இல்லையப்பா, 'என் அண்ணா இறந்தஅன்று, அம்மா கோவென்று கதறிப் புரண்டு அழுதது நினைவிற்கு வந்தது! அதனால் மனம்..."

"அதிகமாகத்தான் வருத்த மடையும் — அதையெல்லாம் நினைத்துப் பார்த்தால்! நேரமாகிறது, புறப்படலாமா?"

"ஆமாம்பா புறப்படவேண்டியதுதான் — ஒவ்வாரு நொடியும் என்ன நேரிட்டதோ என்று அங்கு அத்தான் துடிதுடித்துக்கொண்டிருப்பார்!" என்று சிரித்துக் கொண்டே அவள் கூறியதும், அவர்கள் குதிரையை நோக்கி நடந்தனர்.

காட்டிற்குள் புகுந்து குதிரைகள் வேகமாக ஓடிக்கொண்டிருந்தன. 'எப்படித் தப்புவது? எப்படித் தப்புவது?' என்று அவள் இதயம் துடித்துக்கொண்டே இருந்தது.

ஒரு ஆலமரத்தின் அடியில் சென்றபோது, வேறொரு கிளைவழி செல்வதைக் கண்டாள். இதுதான் சரியான இடம் என்ற எண்ணத்தோடு பின்னால் வந்தவனைத் திரும்பிப் பார்த்தாள். குதிரையை இழுத்துப் பிடித்தபடி! அவன் ஒரு அரைக்கல் தூரத்தில் வந்து கொண்டிருந்தான்! முன்னால் சென்றவனும் சிறிது தூரம் போய் விட்டான்!

குதிரையை அந்தக் கிளைவழியில் திருப்பித் தட்டிவிட்டாள். அவள் வேறு வழியில் திரும்பிவிட்டதை, முன்னால் சென்றவன் பார்த்து விட்டான்.

அந்த வழி ஆபத்தானது போகாதே! போகாதே! என்று கத்திக்கொண்டே, குதிரையைச் சட்டென்று இழுத்துத் திருப்பினான்.

அவன் கத்தியதொன்றும் அவள் காதில் விழவில்லை — குதிரையை வேகமாகத் தட்டிவிட்டாள்! வழியை விட்டு விட்டு, செடி கொடிகளுக்கு மத்தியிலெல்லாம் குதிரையைவிரட்டினாள். பொழுது நன்றாக விடிந்துவிட்டதும், மேலே இருந்த ஒரு ஆலம்விழுதைப் பிடித்துக்கொண்டு குதிரையைத் தன்னால் ஓடவிட்டுவிட்டாள்.

ஆலம் விழுதினின்றும் கீழே குதித்து, புதர்களின் ஓரமாகவே மறைந்து மறைந்து நடந்து சென்றாள்.

சிறிது தூரம் சென்றதும், 'யாரது?' என்ற குரலைக் கேட்டதும் அவள் பயத்தால் நடுங்கிக் கொண்டே திரும்பிப் பார்த்தாள்.

அருகில் ஒரு குளமிருந்தது, அதன் கரைமீது ஒருவன் நின்றிருந்தான்.

'நான்...நான்' என்று பேச முடியாமல் நாக்குழறினாள்.'

'பயப்படாதே அம்மா! நான் உனக்கு ஒரு கெடுதியும் செய்ய மாட்டேன்!' என்று சொல்லிக் கொண்டே அவன் அருகில் வந்தான்.

'இவரை எங்கோ பார்த்திருக்கிறோமே? என்ற சந்தேகத்தோடு அவள் முகத்தைச் சிறிது உற்றுப் பார்த்தாள்.

'ஏனம்மா, உன்னை எங்கோ நான் பார்த்திருக்கிறேன் போலிருக்கிறதே!' என்று கேட்டுக் கொண்டே அவள் முகத்தைச் சிறிது நேரம் இமைகொட்டாமல் பார்த்தான்.

'ஆமாம்! நான்கூட உம்மை எங்கோ பார்த்ததாக நினைவிருக்கிறது!' என்று தயங்கிக்கொண்டே அவள் கூறினாள்.

'நீ எந்த ஊர்?'

'மதுரை'

'பொன்னையாவின் தங்கையா அம்மா நீ?'

'ஆமாம்! தாங்கள்?'

'என் பெயர் இளந்திரையன் ஊர் ஈச்சம்பட்டி! எப்படியம்மா இந்தக் காட்டிற்கு வந்தாய்?'

'அதுவா அண்ணா? ஒரு வஞ்சகனின் பிடியில் சிக்க இருந்தேன்—எப்படியோ தப்பி இப்படி ஓடி வந்துவிட்டேன்!' என்று கண் கலங்க அவள் கூறியபோது, 'இதோ இதோ அஞ்சலை!' என்று ஒரு முரட்டுக்குரல் கேட்டதும், இருவரும் அத்திசையில் பார்த்தனர்.

குதிரைகள் மீது வந்த இருவரும் குதிரைகளைவிட்டுக் கீழே குதித்து அவர்களை நோக்கி ஓடிவந்தனர்.

'இவர்கள்தான் அண்ணா!' என்று நடுநடுங்கிக்கொண்டே அஞ்சலை கூறினாள்.

'அருகில் வாரீர்கள் — வந்தால் தொலைத்துவிடுவேன்!' என்று இளந்திரையன் ஆத்திரத்தோடு சொன்னாள்.

'அப்படியா?' என்று கேட்டுக் கொண்டே, இருவரும் ஓடிவந்து அவனைப் பிடித்து ஒரு மரத்தில் கட்டிவிட்டு அஞ்சலையைத் தூக்கிக் கொண்டு ஓடிவிட்டனர்.

(வளரும்)

4-ம் பக்கத் தொடர்ச்சி

யாகத்தான் இருந்தது; கழகம்—காங்கிரஸ் இரண்டையும் ஒப்பிட்டு, அன்றிலிருந்து இன்றுவரை கழகத்தின் வளர்ச்சியும் — காங்கிரசின் தேய்வும் எப்படி எப்படி இருக்கிறது என்பதற்குத் தந்த விளக்கம்கூட கழகத் தோழர்களின் கவனத்திலிருக்க வேண்டிய ஒன்றுதான! என்றார்.

"அன்பழகன் பேச்சோடு முதல் நாள் நிகழ்ச்சி முடிந்து விட்டதில்லையா?" என்றார் காங்கிரஸ் கஞ்சமலை.

"ஆமாம்! இரண்டாம் நாள், குமாரி விஜயாவின் கலைநிகழ்ச்சியோடு தொடங்கியது" என்றார் முத்து, கஞ்சமலையைப் பார்த்து.

"மிஸ்டர் கஞ்சமலை! முதல்நாள் முதல் நிகழ்ச்சி நாகூர் அனீபாவின் இசையோடு தொடங்கியது; இந்த இருவர் நிகழ்ச்சியும், இரண்டாம் நாள் பிற்பகல் நிகழ்ந்த சிவகெங்கை சேதுராசன் கலை நிகழ்ச்சியும் மொதததத்தல் கலை நிகழ்ச்சிகள் யாவும் கருத்தோட்டத்துடனேயே இருந்ததைத் தெரிந்துகொண்டீர்களா? என்றார் மணிமொழி.

கலைமணி, முத்துவைப் பார்த்து, "எனக்கு ஒரேஒரு குறை, பத்திரிகையாளர்களுககு எஸ். எஸ். ஆர். குழுவினர் நடத்தும், மணிமகுடம், தென்பாண்டி வீரன் நாடகத்தைப் பார்க்க, நடந்து முடிந்த எந்தவொரு மாநாட்டிலும் வசதி கிடைக்கவில்லை; பெறவும் முடியவில்லை என்றார் வருத்தத்தோடு!

"எனக்குக்கூட அப்படி ஒரு குறைதான!" என்றார் ராமசாமி. மணிமொழியும் அதனை ஆமோதித்தார். உடனே அவர், இரண்டாம் நாள் தொடக்கமாக, என். வி. நடராசன் பேசும்போது, "பிரசார சாதனயாகத்தான் காங்கிரஸ், ஜனநாயக சோஷலிசத் தத்துவத்தைக் கொண்டிருக்கிறது என்றும், சில பிரதான தொழிலகளை அரசுடைமையாக்கி நடத்துவதன் மூலம் பலகோடி ரூபாய் லாபம் கிடைக்கும்; அதனால் 5 ஏகருக்குக் குறைந்த ஏழை விவசாயிகளுககு வரித்தள்ளுபடி செய்ய முடியும்; காங்கிரஸ் இதனைச் செய்ய மறுக்கிறது என்றும், அவர் அளித்த விளக்கம், சிறந்த விளக்கமே! இல்லையா கலைமணி என்றார்.

"உண்மை, உண்மை! நெலலிக்குப்பம் சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி பேசும்போது, இந்த அரசு, எவ்வளவு கடன்பட்டிருக்கிறது — மத்திய அரசு எவ்வளவு? மாநில அரசு எவ்வளவு — யார் யாரிடம் எவ்வளவெவ்வளவு?- என்றெல்லாம் புள்ளிவிவரத்தோடு ஆதாரம் காட்டி, இந்தக கடன்காரர்களால் நாட்டுக்கு இனியும நன்மை செய்ய முடியுமா? என்று கேட்டாரே, அதுவும் உண்மைதான் என்றார் கலைமணி!

க. அறிவழகன் பேசும்போது, பம்பாய் யோகி ஒருவர், ஹடயோகம் கற்று, நீர்மேல நடக்கப்போவதாக விளம்பரம் செய்து, இந்தியப் பிரதமரின் ஆசியோடு, நீரிலநடந்து மூழ்கினரே-அதேபோல்தான் காமராசரும் ஹடயோகம் கற்று வந்திருக்கிறார், சோஷலிசத்தைப் பரப்ப! பாவம் காமராசர்! முதலாளித்துவக் கடலில் மூழ்கிவிடப் போகிறார் என்று எடுத்துக்காட்டிய உவமை மிகச்சிறந்தது! என்றார் ராமசாமி.

பாலு அவரை இடைமறித்து, புலவர் அறிவுடைநம்பி, அடுத்த தொடர்க் கூட்டத்தில் ஆட்சிமொழிச் சட்டத்திருத்தம் ஏறறுக் கொளளப்படும் என்று செழியன அவர்களது கடிதத்தற்குப் பதில் தந்த இந்திராகாநதி அவர்களால் பின்னல நடைபெற்ற தொடர்க் கூட்டங்களில் திருத்தம் கொண்டு வரப்படாத தன்மையையும், நிலைமையையும் மக்கள் புரிந்து கொண்டாக வேண்டும் என்று மொழிப் பிரச்னையைத் தொட்டுக் காட்டியதை நான் கை தட்டி வரவேற்கிறேன் என்றார்.

ராமசாமி, எத்தனை அமைச்சர்கள் மீது எத்தனை எத்தனை லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுககள் கூறப்பட்டுள்ளன; இவற்றை மறுக்கின்ற எந்த ஒரு அமைச்சராவது, கூறுபவர் மீது மானநஷ்டவழககுத தொடுத்து நீதி மன்றத்தில் ஏன் அவர்களைக் கொண்டு வந்து நிறுத்தக் கூடாது? தங்கள் புனிதத் தனமைக்கு சட்டப் பாதுகாப்புத தேடிக்கொள்ளக் கூடாது? யாருக்காவது அந்த யோக்யதை உண்டா? என்று சத்தியவாணிமுத்து அம்மையார் கேடடது பக்களின் இதயத்தைத் தடவிக்கொடுக்கும் நலல பேச்சு — இல்லையா முத்து! என்றார்.

"ஆமாமாம்! என்று கூறிய முத்து, சிட்டிபாபு பேசும் போது, 24 லட்சம் ரூபாய் மூலதனத்தில் காண்டாராகர்த் திட்டத்தை நிறைவேற்றினல், கோவை மாவட்டத்துத் தண்ணீர்ப் பிரச்னை பெரும் அளவு சமாளிக்கப்படும் என்றும் ஏறத்தாழ 27 சிறிய, பெரிய பஞ்சாயத்துக் கிராமங்களுக்கு வசதி கிடைக்கும் என்றும் இதனை காங்கிரசு, எதனல் ஒத்திப்போட்டுக் கொண்டே போகிறது? எனக் கேட்டுவிட்டு, பொள்ளாச்சி ரயில் திட்டம் தடம்புரண்டு கிடக்கிறது! என்பதற்குக் கொடுத்த விளக்கத்தை உங்கள் இதழில் சற்றுத் தெளிவாகவே விளக்குங்கள்! கலைமணி என்றார் சிரித்துக்கொண்டே.

தீர்மானஙகள்மீது பேசும்போது ராஜாராம் எம். பி., அமைச்சர்களாகப் பதவிப் பொறுப்பேற்பவர்கள், தங்கள் சொத்து பற்றிய முழு விவரத்தையும் கொடுத்துவிட வேண்டும் என்று டாக்டர் அம்பேத்கார் கூறியதுபோல, நடைமுறை இருந்திருந்தால், நாட்டில் இவ்வளவு பெரிய ஊழல்கள், குற்றங்


## வாய்வு சூரணம்
**(Stomach Powder)**

மலச்சிக்கல் — மலக்கட்டு — உஷ்ண வாய்வு—பித்த வாய்வு—இடுப்புவாய்வு—இடுப்பு, கைகால் பிடிப்பு மூட்டுகள் வலி—அசரிக்கை—செரியாமை—வயிற்றுவலி முதலான வாய்வுகளை நீக்கி நல்ல பசி எடுப்பதற்கும் திரேகாரோக்கியத்திற்கும் மிகச் சிறந்தது. (பத்தியமில்லை.)

**160 கிராம் டின் ரூ 3—50**

தேவைக்கு எழுதவும்:

**S. V. R. கண்டர் சன்ஸ்,**
வாய்வு சூரணம் டிப்போ
தம்மண்ண செட்டியார் ரோடு
அரிசிப்பாளையம், சேலம்-9.

கிடைக்குமிடஙகள்:

**தேஜ்பால் & கோ.,**
91, நைனியப்பநாயக்கன் தெருவு,
சென்னை-3.

**இளங்கோ கிளீனிக்**
நெல்லித்தோப்பு,
வில்லியனூர் ரோடு, பாண்டிச்சேரி-5.

**சொக்கனுதம் செட்டியார்,**
நாட்டு மருந்துக்கடை
திருப்பாபுலியூர், கடலூர N. T.

**ராஜா மெடிகல் ஹால்**
31, தாமராஜா கோவில் தெரு,
பெங்களூர்.1 (கண்ட)

**E. வல்லாராம்நாடார் & சன்ஸ்**
188-A, தாராவி ரோடு,
பம்பாய்-17.

**ஆத்மஜோதி நிலையம்**
நாவலப்பிட்டி, (சிலோன்)

**ஸ்ரீ கணபதி அண் கம்பெனி**
66, பெல்பீல்டு ஸ்டிரீட்,
ஈப்போ P.O. (மலேசியா)

கள் மலிந்திருக்குமா? என்று கேட்டது குறிப்பிடத்தக்க பேச்சு அல்லவா! என்று கேட்டுவிட்டு ராமசாமியைப் பார்த்தார், முத்து.

• **அவர், ராஜாங்கம் எம். எல். ஏ.,** பேசுகையில், தான் ஒரு காங்கிரஸ் பிரமுகர் வீட்டில் தங்கி இருந்ததாகவும், அந்தப் பிரமுகரும், மற்றும் பல காங்கிரஸ்காரர்களும், வருங்காலத்தில் கழகம்தான் ஆளும் பொறுப்புக்கு வரும் எனவும், இதே கருத்தை ஆங்காங்குள்ள காங்கிரஸ்காரர்களே ஒருவர்க்கொருவர் சந்தித்துக் கொள்ளும்போது பேசிக்கொண்டு வருவது தனக்குத் தெரியும் என்றும் சொல்லிய விளக்கம், புரியாத சில காங்கிரசாருக்கு நல்ல பாடம்! என்றார்.

சுவரொட்டிகள் ஓட்டி, விளம்பரம் எதுவும் செய்துகொள்ளாமல் மேலை நாடுகள் பலவற்றிற்கும் சுற்றுப் பயணம் நடத்திவிட்டு, அண்மையிலேயே இந்தியா திரும்பிய **அருள். முத்து** எம்.பி. பேசும்போது இந்திய நாட்டின் சாதனை, மேல் நாடுகளுக்குச் சென்று பார்க்கும்போது நன்கு புலப்படுகிறது என்றும், பெரும்பாலான வீடுகளில் துண்டு விளம்பரங்கள் ஒட்டித் தொங்கவிடப்பட்டுள்ளன என்றும், அவற்றில், **"நீங்கள் மிச்சப்படுத்தும் ஒவ்வொரு தானிய மணியும், இந்தியாவில் செத்துக்கொண்டிருக்கிற ஒரு உயிரைக் காப்பாற்றும்** என்று எழுதப்பட்டுள்ளதாகவும், நாட்டின்மீது உள்ள பற்றின் காரணமாக, வெளிநாட்டில, இந்திய நாட்டின் மானத்தைக் காக்க, அதுபோன்ற விளம்பர நிலைமையை மறுக்க வேண்டி நேரிட்டது என்றும் குறிப்பிட்டது நெஞ்சு நெக்குறுக வைத்துவிடவில்லையா பாலு! என்றார் மணிமொழி.

மிகச் சரியாகச் சொன்னீர்கள்! அத்துடன் **கே.ஏ. மதியழகன்** பேசும்போது, தமிழ் நாட்டில் பல பணக்காரர்களை, லஞ்சம், பதுக்கல், வரி ஒழிப்புக் காரணமாகக் கைது செய்ய வாரண்ட் தயாராகியும், நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படாத தன் மர்மக் கதையைப் படம் போட்டுக் காட்டியதுகூட எனக்கு அப்படித்தான் இருந்தது என்றார்.

ராமசாமி அரும்பு மீசையைத் தடவி விட்டுக்கொண்டு, "பொல்லாத ஆட்சியை ஒழிக்கப் பொள்ளாச்சியில் கூடியிருக்கிறோம்!" என்று **கலைஞர் கருணாநிதி** பேசத் தொடங்கியபோது கரவொலி வானை எட்டவில்லையா! என்று கேட்டுவிட்டு, வாய்வீரம் பேசும் காமராசர், நான் அதைச் செய்வேன்! இதைச் செய்வேன் என்றார்; ஆனால் அவருக்குத் தெரியாமலேயே அரசுக் காரியங்கள் அத்தனையும் நடைபெற்றுக்கொண்டுள்ளன என்றும், உணவு அமைச்சராக மந்திரி மன்றுடியார் இருந்தபோது, அரசாங்கக் கொள்முதலுக்கு அரிசி கொடுக்க மறுத்துவிட்டு, தனி வியாபாரிகளுக்குக் கொடுத்தார் என்றும், அதன் காரணமாகவேதான் உணவு மந்திரி பதவி பறிக்கப்பட்டது எனவும் கூறிய ஒரு உண்மை, மாவட்ட மக்களை விழிப்படையச் செய்யத் தவறுதல்லவா—என்றார்.

அதனை ஒப்புக்கொண்ட கலைமணி "1967-ல நாம் சந்திக்கவிருக்கிற எதிரிகள் மிக்க வலிவு கொண்டவர்கள்; எதிரிகளுக்குத் தொழிற்சாலைகள் ஒவ்வொன்றும் ரூ. 10 ஆயிரம் எனப் பங்குபோட்டுத் தேர்தல் நிதி அளித்திருக்கின்றன; முழு ஆதிக்க வலிவோடு காங்கிரஸ் தேர்தல் களத்தில் இறங்க இருக்கிறது; நாம் இலட்சியங்களையும், நல்வாழ்வுக்கான திட்டங்களையும் மட்டும் கொண்டு எதிரிகளைச் சந்திக்கவிருக்கிறோம்; விழிப்போடும் எச்சரிக்கையோடும் இருந்து தீர வேண்டும் என்ற **நாவலர் நெடுஞ்செழியன்** பேச்சுக்கேட்டு நான் கிறுங்கிப் போனேன் என்றார்.

**எஸ். எஸ். ஆர்.** பேசும்போது, கழகத்தை சினிமாக் கட்சி என்று கூறி கேலியும் கிண்டலும் செய்தவர்கள், அவர்களிடமே தஞ்சம் புக வேண்டிய அவல நிலைக்கு ஆட்பட்டுப் போனதுபற்றிப் பேசியது கேட்டு மெய்சிலிர்த்தது என்றார்.

**அண்ணா** அவர்கள் பேசியதுபற்றி ராமசாமி விளக்கும்போது—

கழகத்தின் தலைவர்கள், பேச்சாளர்கள், தொண்டர்கள் முதலான பலரின் நீண்டதொரு பட்டியலைப் படித்துவிட்டு, இந்த நீண்ட பட்டியலில் காணப்படும் பெயர்களை அறிந்துகொள்ளும், அறிவுள்ள எவரும் கழகத்துக்கு நாடாளத் தெரியுமா என்று கேட்க மாட்டார்கள்.

காமராசரிடம் அறிவுத்தெளிவான பேச்சை எதிர்பார்க்க முடியாது; புலி வேடதாரியிடம் போய் பரத நாட்டியப் பாவங்களை எதிர்பார்க்கக்கூடாது;

நம்மிடம் தேர்தல் நிதி குறைவாகக் கொடுக்கப்படுகிறது என்று குறைபட்டுக்கொண்டார்கள். காமராசர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்தபோது எந்த முதலாளியும லட்சம் லட்சமாக அவரிடம் நிதி கொடுத்துவிடவில்லை.

ஓமந்தூரார் முதலமைச்சராக விருந்த காலத்தில், விமானநிலையத்தில் குடியரசுத் தலைவருக்குக் கொடுக்கப்பட்ட ஒரு வரவேற்பில், போலீஸ் அதிகாரி பார்த்தசாரதி ஐயங்காரால, விரட்டியடிக்கப்பட்ட காமராசரை எனக்குத் தெரியும்.

பதவி இருக்கிற வரையில்தான் இத்தகையவர்களுக்கு மதிப்பும் புகழும். எட்டாண்டுக் காலம் முதலமைச்சராக இருந்த ஒருவரிடம்—எந்த ஒன்றையும் சாதித்துக் கொள்ள முடிந்தவர் என்று நம்பப்படும் காமராசரிடம் லட்சலட்சமாக நிதி கொடுக்கப்படுவதில் வியப்பில்லை. இவர்களது பதவி போய்விட்டால், லட்சங்கள், லட்சியங்கள்கூட மாறிப்போகும்!

15 ஆண்டுக் காலத்துக்குள் கழகத்தை இவ்வளவு வலிவும் பொலிவும் உள்ளதாக ஆக்கி இருக்கிறோம். எங்களிடம் காந்தியார் இல்லை! நேருபிரான் இல்லை! படேல்ஜிக்களை இல்லை. ஆனாலும் கழகத்தை வலிவுள்ளதாக ஆக்கி இருக்கிறோம். இந்த வளர்ச்சி, உலக சரித்திரத்தில் காணப்படாத வேகமும், திறனுமுடையது. இவ்வளவு பெரிய எதிர்ப்புக்கிடையிலும் வளர்ந்த வண்ணமே இருக்கிறோம். நம்மால் ஏன் நாடாள முடியாது? கழகம், இப்போது நாடாளும் தகுதியைப் பெற்றுவிட்டிருக்கிறது.

காங்கிரஸ் கட்சியின் அன்றாட நிலைமையை எண்ணி காமராசர் அமைதியாக உறங்க முடியுமா? அப்படிப்பட்ட நிலைமைக்கு ஆளாகிவிட்ட காங்கிரஸ் இனி நாடாளலாமா?

எனவேதான் உங்கள் ஆற்றலை, செயலை, விருப்பத்தை, ஆர்வத்தை வருகிற 67 தேர்தலிலே நீங்கள் காட்டித் தீரவேண்டும்.

—என்று எடுத்துக் காட்டியதைக் குறிப்பிட்டார். பஸ் வந்தது, அனைவரும் ஏறி அமர்ந்தனர்.

—சீயேயெம்.

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பித் தெரு, உரிமையாளர் இ. எல். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.